உ
சிவமயம்



யாழ்ப்பாணம் நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் அனலைதீவை வாழ்விடமாகவும்,
யாழ் வண்ணையம்பதியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த

அமரத்திரு

# சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "கணபதி நாதம்"

05.04.2011


உ
சிவமயம்

உ
சிவமயம்



உயர் சைவ வேளாண் குல திலகர்களான இரு மரபும் தூய தனிநாயக முதலியார்
வழித்தோன்றல்களான நெடுந்தீவு சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின்
கனிஷ்ட புத்திரனும், அனலைதீவு வேலுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை
தம்பதியரின் மருமகனும், திருமதி சிவக்கொழுந்துவின் அன்புக்கணவருமான

உயர்திரு

# சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்களின்

# கணபதி நாதம்

## நினைவு மலர்

05.04.2011

# சமர்ப்பணம்

*அன்னை பூமியாம் நெடுந்தீவில் அவதரித்து,*

*அன்னிய மண்ணில் அரசபணி புரிந்து,*

*வன்னியர் பூமியில் கமபுலம் பெருக்கி,*

*கன்னிகை தானமதை அனலையில் பெற்று,*

*அன்புச் செல்வங்களுக்கு ஆதார சக்தியாய் விளங்கி,*

*பண்புடனே பலநோக்கில் கூட்டுறவாகி,*

*கண்ணியமாய் தீவகத்திற்குக் காரியங்கள் நல்கி,*

*புண்ணிய சிவலோகம் புகுந்திட்ட எந்தைக்கு*


*இக் "கணபதி நாதம்"*

*சமர்ப்பணம்.*

குடும்பத்தினர்.



உ
சிவமயம்



அன்னை மடியில்
28.01.1939

ஆண்டவன் அடியில்
06.03.2011

# அமரத்திரு
# சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
அவர்களின்

## திதி நிர்ணயம்

ஆண்டு விகிர்தி யதில்மாசி வளர் பிறைதனில்
நீண்ட புகழ் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையவர்-காணற்கு
அரியவன் சிவலோகத் தீசன் பாதமலரடி
சேரச் சென்றிட்ட நாள்

உ
சிவமயம்

# 3ஆம் ஆண்டு நினைவில்



அன்னை மடியில்
17.11.1978

ஆண்டவன் அடியில்
17.02.2008

அமரர்

## கணபதிப்பிள்ளை சிறிமாறன்

அவர்களின்

*திதி நிர்ணயம்*

சர்வசித்து வருடமதில் மாசித்திங்கள் திதியோபுகழ்
பூர்வயக்ஷ பீம ஏகாதசி தன்னில்–செயல்
வீரன் கணபதிப்பிள்ளை சிறிமாறன் எனும் நல்லான்
பரந்தாமன் துணை கொண்டு சிவனடி சேர்ந்தார்.

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே!

கூற்றாயின வாறுவிலக் ககலீர்
கொடுமை பல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி, முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
விடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே,

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான்திருநீறே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளத்தாழுறு புனலிற் கீழ் மேலாகப்
பதைத்துருகு மவர் நிற்க என்னை ஆண்டாய்க்

குள்ளந்தாள் நன்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணா அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல் ஆம்
கண் இணையும் மரமாம் வினையினேற்கோ

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு
ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



உ

# விநாயகர் கவசம்



வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க. (1)

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க. (2)

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க (3)

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யத் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க (4)

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தா் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க. (5)

அக்கினியிற் சித்தீசர் காக்கவும்
புத்திரா்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரா்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திங்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகமு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க (6)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசா்தாம் விரைந்து காக்க. (7)

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர் முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க (8)

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும் பாலிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். (9)



# நெடுந்தீவு நெழுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய
# திருவூஞ்சல் பாடல்

## காப்பு

சீர்பூத்த வேதசிவா கமங்க ளோங்கி
திகழுமியாழ்ப் பாணநகர்க் கொருசார்பாகி
நீர்பூத்த நெடுந்தீவிற் குடபா லோங்கு
நெழுவினியிற் சித்திவிநா யகர் தம் மீதிற்
பேர்பூத்த ஊஞ்சலிசை யினிது பாடப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார்தந்த
கார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதுங்
கடம்பூத்த கணபதிதாள் காப்ப தாமே.

பூமேவு நான்மறையுங் கால்க ளாகப்
புரையிலும் வேதமெழிற் சட்டமாக
பாமேவு முபநிடதம் பலகை யாகப்
பரவுமெண் கலைகளுயர் கயிற தாக
மாமேவு சிவாகமமே விட்ட மாக
மருவு பிரணவமாகும் மஞ்ச மீது
தேமேவு சோலைநெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடீ ரூஞ்சல்

ஆதார சத்தியொடு மனந்த னேந்து
மதன்தன்மை பீடமுறு பதும மீதில்
தாதாரும் வாமாதி சத்தி போற்றத்
தயங்கிரவி மதியனல்நல் சத்தி யாகும்

மீதான மண்டலத்தின் மேலே தங்கி
மெய்யடியார்க் கடியர் பவ வினைகளான
தீதான திரியதெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடீ ரூஞ்சல்

அரிபிரமர் மலர் சிதற வமரர் கோனு
மழலவனு மடப்பையொடு தீபந் தாங்க
வருநிரதி யமனுடைவாள் பிரம்பொ டோங்க
வருணனொடு வளிசிவறி வட்ட மேந்த
இரவிசசி கவிகைகோ டங்கிருபால் மேவ
இயக்கர்பதி யீசான னமரர் போற்றத்
திருமறைமா முனிவரர் கரவென் றேத்தச்
சித்திவிநாயகமுதலே யாடீ ரூஞ்சல்

அந்தரதுந் துபிமுளங்க வியங்க ளார்ப்ப
அமரர் மறை முனிவர்தரு மலர்கள் தூற்ற
பந்தமறு தும்புருநா ரதர்கள் பாடப்
பரிவினொடு மரமகளிர் நடன மாட
வந்தரம்பை ஊர்வசிவெண் கவரி நீட்ட
மகிழ்ந்து திலோத் தமையருகே வடந்தொட்டாட்ட
சிந்தையருள் பொழிந்துநெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடீ ரூஞ்சல்

ஐங்கரனே யுமைமகனே யாடீ ரூஞ்சல்
அருளொழுகு கயமுகனே யாடீ ரூஞ்சல்
சங்கரனார் திருமனனே யாடீ ரூஞ்சல்
சதுர்வேத முழுமுதலே யாடீ ரூஞ்சல்

தங்குபுவி நீரனல்கால் விசும்பொ டான்மாச்
சசியிரவி யென்னுமட்ட மூர்த்தி யாகுந்
திங்களணி திருமுடியா யாடீ ரூஞ்சல்
சித்திவிநா யகமுதலே யாடீ ரூஞ்சல்

அந்தணரா வினமரசர் வணிகர் வாழி
அவனிமழை பொழிந்து வேளாளர் வாழி
புந்திமகிழ் சிவனடியா ரெவரும் வாழி
பொருவில்சைவ சிந்தாந்த நெறியும் வாழி
செந்திருநா மகளருளிங் கெங்கும் வாழி
திருநீறும் மஞ்செழுத்துஞ் சிறந்து வாழி
சிந்துவளர் நெடுந்தீவி லடியார் வாழி
சித்திவிநா யகரடிகள் வாழி வாழி!



## அனலைதீவு பெரியபுலம்
## ஸ்ரீ சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய
## திருவூஞ்சல் பாடல்

### காப்பு

பூமேவு செங்கமலத் தேவனோடு
பொரவரிய புள்ளுயர்த்த நேமியோனும்
புவியிடந்தும் வானின்மேல் ஓடியெய்த்தும்
பொன்னடியும் திருமுடியங் காணாநிற்க
பாமேவு பழம்பாடற் புலவரேத்த
பக்தியில் வீழ் சங்கரராம் நாதரோடு
பல்லுலகி லுயிர்த் தொகைகள் பயின்றுவாழப்
பாங்கினொடும் அருள் கனிந்தேகாக்குமன்னை

தேமேவு பசுங்கொடியங் கயற்கண்ணி
தேவிபரா சக்தியுமை சேர்ந்தளித்த
தெளிதமிழின் சுவைகூட்டும் பெரியபுலத்
திருப்பதியிற் கணபதிப் பிள்ளையார் மேற்
சீர்மேவு திருவூஞ்சற் பாடலோதத்
தேவரெலாந் துதிசெய்ய மகிழ்ந்தவர்க்குத்
திருவளிக்கும் மூத்தபிள்ளை காவலாகித்
தெளிபொருளும் சொல்வளமும் அருள்வாயே

### நூல்

ஒளிநிறையு மணிபொதிந்தே யொப்பிலாத
உலகுபரித் துயர்ந்திடுநல் நாகமெட்டும்
ஒன்றாகி நிலவுகால் கால்களாக
ஒப்பரிய செம்பொன்னின் கற்றைவீசக்
களிபெருகி நீர்த்தரங்கம் கதித்தெழுந்தே
கரையெறியும் காசினியின் நடுவணோங்கும்
கருதரிய நெடுநாகம் பலகையாக
கதிர்மணிகள் சுடர்பரப்ப உலகு தாங்கும்

தெளிவு பெறு மாநாகம் முதலதான
தேசுதிகழ் பணாமகுடப் பெரியநாகம்
தெரிந்தெடுத்துத் தொடுத்திடுநற் கயிறேயாகக்
செழுங்கமலத் தயன்படைத்த வூஞ்சலேறி
துளிமலியக் கார்த்திரளின் கூட்டமெல்லாம்
தொக்குறையும் பொழில் சூழ்ந்த அணலனகர்
தொல்பதியில் உறைந்தருளும் பிள்ளையாரே
தொடர்ந் தெம்மை யாண்டுநீரா டீரூஞ்சல்.

புங்கவர்கள் வழுத்திப்பூத் தூவியே த்தப்
பொலிவுபெறு மிரவியுடன் திங்கடானும்
பொற்கிரண கவிகையினைத் தாங்கி நிற்கப்
புதுமையொளி காலுநல்ல ஆலவட்டம்
வங்கமுறும் கடலரசன் வருணனோடும்
வாழ்வேந்தன் சமனுங்கைக் கொள்ளாநிற்ப
வருதிசையி னிந்திரன்கா ளாஞ்சிகொள்ள
வாயுநல்ல சாமரைகை பற்றிப்போற்ற

பங்கமுறாப் போர்நிருதி யடைவாள் தான்
பரிசினொடும் பற்றியிறை பாங்கில்வைகப்
பதுமநிதி சங்கநிதி மன்னவனே
பண்புடனே யடைப்பையினை யினிதுதாங்க
சங்கினங்கள் துறைத்தலையில் முத்தமீனம்
தண்மருதப் பணைசூழ் அனலைப் பதியினில்வாழ்
சங்கரநா தர்நல்கும் பிள்ளையாரே
தனிக்களிறே யுவந்துநீரா டீரூஞ்சல்

படவரவும் பனிமதியும் வைத்தநாதர்
பாங்குறையும் குழல்மொழிவாய் மங்கைமுன்னே
பண்பாடித் துதிசெய்யும் இசைமுனியாம்
பார்போற்றும் நாரதர்தாம் படைத்தநல்ல
தடஞ்சினையின் வந்தநுறுந்தீஞ்சவைசேர்
தனிப்பழத்தின் தெவிட்டாத விருப்பு மீறித்
தாமிருவர் தனித்தனியாய் அருந்தவுன்னி
தந்தையொடு தாயையுநீர் வேண்டி நிற்க

கடல்வளைத்த வுலகமெலாம் கணத்தினுள்ளே
கண்டுவந்து கனிபெறவீ ரென்றுகூறக்
கலாபமயிற் கந்தனோரி மைப்பிலுள்ளே
கடந்துகனி பெறவேனா னென்று செல்ல
இடபமிசை இறைவனையம் இறைவியோடும்
இதமாக இறைஞ்சிவல மாகவந்து
இனிமைசெறி மாங்கனியைப் பெற்றுமகிழ்
அனலைநகர்ஏரம்பா ஆடீரூஞ்சல்

காராளர் வினைவலியால விளையுநல்ல
கார்நெல்லும் வெண்ணெல்லும் கூட்டிவைக்க
கார்க்குலங்கள் கண்டுயிலும் போரிலேறிக்
காளையினம் துள்ளிமிதித் தொதுக்கநின்ற
தேராளர் காராளர் சேர்ந்துவந்தே
தேர்ந்தெடுக்கக் கூட்டுநெலின் மணிக்குழாங்கள்
திருத்தியநன் னீலமணிக் குலகியோ
சிறப்புறுமா வைரமணிக் கிரக்குலமோ

போரார்வேற் கண்மடவார் போல்வதென்னப்
பொலிவடனே காட்சிதரு மருதவேலிப்
பொங்குகொலிநீர் குடைந்துதெங்கினி ளநீர்தன்னில்
புதுவருக்கைத் தீம்பழத்தின் தேன்பெய்தே
சீரார்ந்த செவ்வழியாழ் இன்சொலூட்டித்
தித்திக்க வூட்டிடுவார் திரண்டுநிற்கும்
தேர்வீதிப் பெரியபுலத் தெய்வநீரே
திருவனலைத் தலைவாநீரா டீரூஞ்சல்

மலர்க் கொன்றைத் தொங்கனாலும் புயங்களாட
மாவயிற்றில் மணியிரவி மருவியாட
மலமகற்றும் பாசமுமங் கசமுமாட
மதாணியுடன் சூழியமும் மாறியாட
உலகவிருள் ஒட்டுமொற்றைக் கொம்புமாட
உயர்வுறுநற் றுதிக்கையுயிர் உயர்த்தியாட
உளதுதிரக் கண்ணினருள் பரவியாட
ஒங்காரத் துள்ளொளியா மொளியுமாட

நலமுடனே யடியர்பணி நின்துணைத்தாள்
ஞாலமெல்லாம் வினைதீர்த்தே யருளினாட
நான்முகனும் மாலுமுளம் உயிருமாட
நாமகளும் அலைமகளும் நலம்பெற்றாட
நிலம்வளையும் நீரெரிகால் வானுமாட
நிறைதவத்தின் முனிதேவர் உருகியாட
நீள்மறையினுட் பொருளேயா டீருங்சல்
நிலவு அனலை பதியாரேயா டீருஞ்சல்

விரும்பியனை நினைந்துருகும் மனத்தவர்தம்
மெய்ப்புலங்கள் தித்திக்க வருமமுதே
வேலைவளை புவனமெலாங் கடந்துநின்ற
வேதமுதற் றாதைமகிழ் மழகளிறே
தரும்பிரபை மலையரையன் பெற்றபாவை
தடங்கணினை களிரவரு தண்மதியே
தடங்கடலிற் றுயில்மாயன் கூத்ததனைத்
தான்காண விளைவுறுநற் கலைமணியே

கரும்பைநிகர் தமிழ்ச்சுவையின் தீம்பாடற்
களிரசமே தெளிதேனே கருதநின்ற
கவிநலமே திருமணியே கண்டே நின்
கழலடைந்தார்க் கெளிவந்த கருணைவள்ளல்
சுரும்புசெறி கமலமலர்ச் சுனைவாசம்
சுற்றிநிறை பெரிய புலம் உவந்துவாழும்
சுந்தரநற் சங்கரரின் பிள்ளையாரே
சோதிமாமணி நீரேயா டீருஞ்சல்

உலகமெலாம் நிறைந்துளநல் லுயிர்கதொகைகள்
உன்னுருவாம் ஓங்கார ஒளியிற்பட்டு
உள்பின்னே யானைநிரை போற்றொடர
உன்கையிற் பாசமங்கு சமுங்கொண்டு
நிலமதனில் அவர்மலங்கள் போக்கியருள்
நீங்காநற் பெரும்பேறு கூட்டவெண்ணி
நீரலையும் நதிக்கரையும் நீளுமால
நீழலிலும் சந்தியிலும் அரசின் கீழும்

புலங்களிலே நினையுணர்வார் உளமலரும்
பூங்காவின் எல்லையினும் பொருந்திநின்ற
புத்தழக மிகப்பொலிபூங் குளக்கரையும்
பொலிவுடனே யெழுந்தருளி யிடர்களர்ந்தே
அலந்தவர்க்கு நிறைசித்தி யீந்துகாப்பாய்
அனலைநக ரெந்தையேயா டீருஞ்சல்
அடைந்துன்றாள் போற்றவருள் தந்தளங்கள்
ஆனைமுகத் தண்ணலேயஙா டீருஞ்சல்

விண்ணவரும் மண்ணவரும் விரும்பியேத்த
வேதியர்மா மறையினொலி யெழுந்துபொங்க
விதிமுறையாம் பரதமுடன் பண்ணுமொன்றி
வெளியினடம் காட்டிநின்று மகிழ்ச்சிதூங்க
தண்ணெனநற் றமிழ்க்கவிதை யமுதவண்டு
தரணியெலாம் நின்புகழைத் தந்துபாட
தனியிசையினுட்பொருளாம் நாதகீதம்
தாவியெழுத் தொலியிசைத்துச் சந்தமூட்ட

வெண்மையொளி தயங்குநல்ல கங்கைநன்னீர்
மேற்கட்டி னசைந்தசைந்தே யெழில்சிறக்க
விண்ணிலெழு துந்துபிதான் முழங்கிநிற்க
மேலெழுந்து பாய்திரையின் சங்கமார்ப்ப
அண்ணல்சங்கரநாதர் அருளவந்த
ஆனைமுகப் பிள்ளையாரா டீருஞ்சல்
அனலைநகர்ப் பெரியபுலம் உறையுமெங்கள்
அற்புதரே தெய்வமேயா டீருஞ்சல்.

வாழி

மறையுருவாய் வருமாகுமா கனம்வாழி
மாநிலத்தோர் மலமோட்டும் பதைகைவாழி

மனுநூலோர் புகழ்தரும நெறியம் வாழி
மாமழையும் மலிந்துநிதம் வாழி வாழி
பிறைமுடித்த பிஞ்ஞுகரா கமம் வாழி
பெருமைபெறு தவம் வாழி விரதம் வாழி
பொட்புறுநல் லரசர்கோல் செழித்துவாழி
பேசுபொருட் டிருமுறைகள் வாழி வாழி

நிறைபுனல்சேர் அனலைநகர் நீடுவாழி
நெற்கழனிப் பெரியபுலம் நிலவிவாழி
நேயமுறுங் கற்புநெறி குலவிவாழி
நிலவுகால் மதியிரவி வாழி வாழி
அறைபுகழ்சேர வேதியர்பூசனையும்வாழி
அவனிதனிற் கரிமுகன்றாள் பூசித்தேத்தும்
அன்பர்புகழ் நிலைபெற்று நிலவிவாழி
ஆதிவிநாயகர் பாதம் வாழி வாழி

எச்சரிக்கை

ஆனைமாமுக முடனே பரை
யரன்தந்திட வருவோய்
சேனைமாகணம் தொழவந்தருள்
தேவே எச்சரிக்கை - எங்கள்
கோவே எச்சரிக்கை

சித்திசேர்தர அருள்நாயக
தேசுகொளுந் திருவுருவே
அத்திமாமுக முடனேவரும்
ஆதீ எச்சரிக்கை - அருள்
சோதி எச்சரிக்கை

குறுமாமுனி கொடுவந்திடு
குளிர்கங்கை யினீர்தான்
பெறுகாவிரிப் பாண்ணாக்கிடும்
பெம்மான் எச்சரிக்கை - எங்கள்
எம்மான் எச்சரிக்கை

பானல்வாய்மொழிப் பாவையாருயர்
பணைத்தோளுடை மயிலார்
சோனைவார்குழல் மங்கைமார்புகழ்
துணைவா எச்சரிக்கை - எங்கள்
தலைவா எச்சரிக்கை

கரும்புவேலியில் வாழைமாபல
காண்பெரிய தொல்புலத்தே
விரும்பிவாழ்பவர் வினைகடீர்த்திடும்
விமலா எச்சரிக்கை - எங்கள்
நிமலா எச்சரிக்கை

பராக்கு

சங்கரநா தர்தரும் தநயா - பராக்கு
சாந்தவர்க ளிடர்களையும் தலைவா - பராக்கு
புனிதமுறும் அனலைப்பதி புகுந்தோய் - பராக்கு
ஆகுவாகனம் விரும்பி யமர்வோர் - பராக்கு
அருமறையின் உட்பொருளாய் ஒளிர்வோய் - பராக்கு
பெருமைபெறு வேழமுகப் பிள்ளையே - பராக்கு
வென்றிபுனை வேல்முருகன் முன்னோய் - பராக்கு
பரவுவார் இடர்களைபொற் பாதா - பராக்கு
பாரிலுயர் பெரிய புலப் பதியோய் - பராக்கு

# நாம் காணும் பிள்ளையாரின் வடிவங்கள் 32

நாம் பிள்ளையார் கோவிலுக்குப் போகிறோம். அங்கே பிள்ளையாரைக் காண்கின்றோம். அவர் திருவருவம் உட்கார்ந்த நிலையில் உள்ளது.

இன்னுமொரு பிள்ளையார் கோவிலுக்குப் போகிறோம். அங்கே பிள்ளையார் நின்று கொண்டிருக்கிறார். இன்னுமொரு கோவிலில் நடனமாடிக் கொண்டிருக்கிறார். சில கோவில்களில் பிள்ளையாருக்கு எட்டுக் கைகளும் உண்டு. இதற்குக் காரணம் என்ன? கடவுளை வழிபடுபவர்களின் உள்ளம் அவர்களுடைய வளர்ச்சிக்கு ஏற்ப வேறுபடுகிறது. பக்குவத்துக்கு ஏற்ப வேறுஏற்ப வேறுபடுகிறது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திருவுருவ அமைப்பில் ஈடுபடும் உள்ளம் ஒன்று வகை செய்யும். ஒன்றிய உள்ளம் தியானித்து உயர்கிறது.

எந்தத் திருவுருவத்தில் அவருக்கு ஈடுபாடும் ஒன்றிப் போதலும் தியானித்து உயர்கிறது.

எந்தத் திருவுருவத்தில் அவருக்கு ஈடுபாடும் ஒன்றிப் போதலும் தியானமும் ஏற்படுகிறதோ அந்தத் திருவுருவம் அவருக்கு ஈடேற்றத்தை அளிக்கிறது. இடையறாத தியானம் இன்பங்களைத் தருகிறது. உயிர் உயர்வடையச் செய்கிறது. இவ்வாறாக உள்ள திருவுருவங்கள் பிள்ளையாரின் திருவுருவங்கள் முப்பத்திரண்டு ஆகும். அடுத்து வரும் பக்கத்தில் ஒவ்வொரு திருவுருவத்தையும் படமாகக் காண்பீர்கள். அதற்குரிய சிறப்புச்



**லட்சுமி கணபதி**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம் அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர், அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

### பால கணபதி



நான்கு திருக்கரங்களும், யானை முகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்க திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.



### தருண கணபதி

எட்டுத் திருக்கரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவற்றையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.

### ஸ்ரீ பக்தி கணபதி



சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக, தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.



### வீர கணபதி

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகியதினாறையும் தாங்கிய பதினாரு திருக்கரங்களையும், சிவந்த திருமேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

**சத்தி கணபதி**



செவ்வந்திவானம் போன்ற நிறமுடைய வராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக் கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொரு வர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டிருப்பது தனியழகு, பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்ச லென்கிற அபயகரமும் உடையவர்.



**துவிஜ கணபதி**

நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ் தகம், அட்சமாலை தண்டம், கமண்டலம் இவற் றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்கு கின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன் போல வெண்மையானவர்.

நான்கு யானைமுகங்களை உடையவர்.

**சித்தி கணபதி**



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்த வரும், பொன்கலந்த பசுமை நிறமுடைய வருமாக விளங்குபவர்.



**உச்சிஷ்ட கணபதி**

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற் கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீல நிறத் திருமேனி உடையவருமாக விளங்குப வர்.

வேறுவகை:- பெண்ணின் யோனியின் துதிக்கையை வைத்தவராக காமமோகிதராக விளங்கபவர். நீல வர்ணம் உடையவர்.

### விக்ன கணபதி

சங்கு, கரும்புவிலில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து. பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவரும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவரும், பொன் மேனியருமாக விளங்குபவர்.





### க்ஷிப்ர கணபதி

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூப் போன்ற அழகிய மேனியர் , செந்நிறமானவர்.

### ஏரம்ப கணபதி

அபயம், வரதமாகிய கைகளையுடையவர், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகமும் ஐந்துடையவர், பசமை கலந்த கருமை நிறம் உடையவர்.





### மகா கணபதி

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில்,சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடியர். மடி மீது எழுந்தருளியிருக்கிற தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

### விஜய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.





### நிருத்த கணபதி

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப் பெறுவர். மோதிரங் களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவற்றைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர், கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

### ஊர்த்துவ கணபதி

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றை உடையவர். பொன்வண்ண வண்ணர். பச்சை நிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவி இருப்பவர்.





### ஏகாட்சர கணபதி

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையர், பிறைமுடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், பதுமாசனத்திருப்பவர், பெருச்சாளி வாகனர்.

**வர கணபதி**

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண் ணர், பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன் நிறைந்த மண்டையையுடையவர். பிறைமுடியர்.





**திரயாக்ஷ்ஷ்ர கணபதி**

அசைகின்ற செவிகளில் சாமரையணிந் தவர், பொன்னிறமானவர், நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம் பழம் இவற்றைத் தாங்கியவர், துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**சஷிப்ர பிரசாதர்**

பாசம், அங்கசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்றைத் தரித்தவர், திருவாபரணங்களை அணிந்தவர், பேழை வயிற்றையுடையவர்.





**ஹரித்திரா கணபதி**

மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களை யுடையவர், அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.

## ஏகதந்தார்

பேழை வயிற்றுடன், நீலமேனியர், கேடரி, அட்சமாலை, இலட்டு, தந்தம் இவற்றையுடையவர்.





## சிருஷ்டி கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் அவற்றைக் கரங்களில் ஏந்தியவர், பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர்.

## உத்தண்ட கணபதி

நீலம், தாமரை, மாதுளைம் பழம், கதை,, தந்தம், கரும்புவில், இரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சை மேனியளாகிய தேவியால் தழுவப்பெற்றவர்.






## ரணமோசனர்

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

### துண்டி விநாயகர்

அட்சமாலை, கோடரி, இரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.





### துவிமுக விநாயகர்

தந்தம், பாசம், அங்கசம், இரத்ன பாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர், பசுநீலமேனியர், செம்பட்டாடையும், இரத் தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

### மும்முகப் பிள்ளையார்

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். டது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பெற்றாமரையாஸனத் தின் நடுப்பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் போன்ற சிவந்த நிறம் உடையவர்.





### சிங்க கணபதி

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வாகம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, இரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர், யானைமுகவர், சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

**யோக கணபதி**

யோக நிலையில் யோகபட்டம் தரித்துக் கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு பாசம், அஷ'மாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.





**துர்க்கா கணபதி**

சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்ச மாலை, தந்தம் இவற்றை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவற்றை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.

**சங்கடஹரர்**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசிய மேனியளாக, நீலப் பூவை எந்தியவளாக இருப்பவள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந் தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீல நிறமான ஆடை அணிந்தவர்.



# நெடுந்தீவு
## ஓர் அறிமுகக் கட்டுரை

I. **அமைவிடம்:-**

இலங்கைத் தீவின் வட மாகாணத்தின் யாழ் குடாநாட்டின் சப்த தீவுகளில் நெடுந்தீவும் ஒன்றாகும். இலங்கையின் இறைமைக்குட் பட்ட தீவுகளுள் பெரிய தீவாகவும் இந்து சமுத்திர பகுதியில் யாழ் நகரின் தென்மேற்கே 45km தூரத்திலும் தென்னிந்தியா இராமேஸ் வரத்திலிருந்து 38km தூரத்திலும் நெடுந்தீவு அமைந்துள்ளது. கிழக்கு மேற்காக 8km நீளத்தையும் வடக்குத் தெற்காக 6km அகலத்தையும் கொண்டு சுமார் 48 சதுரகிலோமீற்றர் பரப்புடை யதாக சரிந்த இணைகர வடிவில் உள்ளது. வரலாற்றுக் காலம் தொட்டே தனியான நிர்வாகப் பிரிவாக விளங்கி வருவதுடன் தற்போது J/1-J/6 வரையான கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட தாக 16 கிராமங்களை உள்ளடக்கி தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவினையும் கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தில் நிர்வாக அலகின் அமைவிட முதன்மையை காட்டுகிறது. மேலும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட எல்லையில் உள்ள கச்ச தீவு நெடுந்தீவின் J/2 கிராமசேவகர் பிரிவில் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

II. **பிற பெயர்களும் காரணங்களும்**

நெடுந்தீவு பல்வேறு காலந்தோறும் காரணம் சுட்டி பல பெயர் கள் கொண்டழைக்கப்பட்டமையை அறியமுடிகிறது. அந்த வகை யில் கமலம், பசுதீவு, பசுந்தீவு, பால்தீவு, அபிசேகதீவு அவகாலோ கய மருத்துவமாமலை வனம், மூலிகைதீவு, டெல்ப்ற் (Delft) செந் தமிழ்தேசம், எனப்பலவாறு அழைக்கப்படுகின்றமையைக் காண லாம். நெடுந்தீவு என்பது காரணஞ் சுட்டி உருவானதாகவே கொள்வர். இது தீவின் நீளத்தை குறித்து நிற்காது. யாழ் குடா நாட்டிற்கு நெடுந்தொலைவில் அமைந்த இட அமைவுகருதி அமைந்தது என்பர் சிலசாரார். நீண்டதீவு எனப் புவியியல் அமை வின் காரணத்தை குறிப்பிடுவர். மேலும் குடாநாட்டிலுள்ள மக்கள் இத்தீவுடன் தொடர்புடையவர்களை “நெடுந்தீவார்” என வழங்கும் மரபானது நெடுந்தொலைவில் உள்ள தீவுக்கு உரித்தானவர்கள் எனும் கருத்தின் அடிப்படையில் விளங்கிய மரபே நெடுந்தீவு எனும் பெயர் அமைய வலுவாயிற்று.

கி.பி 2ம் நூற்றாண்டு காலத்தில் நெடுந்தீவையும் ஏனைய தீவு களையும் ஆண்டவனாக கருதப்படுகின்ற வெடியரசனால் நெடுந்தீ வின் மேற்கு பகுதியில் அமைத்த தன் கோட்டையை தாமரைப் பூவைப் போல வர்ணித்து "கமலம்" என இவ்வூரையும் அழைத்த தாக நூல்கள் கூறுகின்றன. இன்றும் குறிப்பிட்ட பகுதியில் வெடி யரசன் கோட்டையினுடைய இடிபாடுகள் அழகிய வட்ட வடிவ தாமரைப் பூவை ஒத்ததாகக் காணப்படுகின்றது. வெடியர சனது வரலாறுகளுடன் தொடர்பான செய்திகளில் வரும் "கமலம்" எனும் இடம் இன்றைய நெடுந்தீவையே குறிப்பதாகின்றது.

மேலும் நெடுந்தீவை பசுதீவு, பால்தீவு அபிசேகதீவு அழைப்ப தும் வலுவான காரணம் குறித்தேயாம். இங்கு நிறைந்த பசுக்கள் இந்தியாவின் தொண்டியிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டமை பற்றி கி.பி 1672 இல் நெடுந்தீவில் தங்கியிருந்த ஒல்லாந்த பாதிரி ஒருவர் தனது கால வரலாற்றேடுகளில் குறித்திருப்பதுவும் போர்த் துக்கேய ஆவணங்கள் நெடுந்தீவை Island of Cows (பசுத்தீவு) அங்கு நிறைந்த பசுக்கள் இன்றளவும் வளர்க்கப்பட்டு நிறைந்த பால் வளமும் கிடைக்கின்றமை மூலம் உண்மை புலனாகிறது. மேலும் இவ்வாறு பெறப்படும் நிறைந்த பாலும், அபிசேக திரவியங் களும் இராமேஸ்வர புனித சேஸ்திரத்துக்கு தினமும் இங்கிருந்து எடுத்துச் சொல்லப்படும் புரதான மரபு குறித்தும் இவ்வாறு வழங்கப் பட்டமையை அறியலாம்.

மூலிகைத்தீவு, மருத்துவமாமலைவனம், அவகாலோகய எனும் பெயர்கள் வழங்கப்படுவதுடன் காரணம் நோக்கின் இங்கு இன்றளவும் பரந்து நிறைந்து காணப்படும் எண்ணற்ற மூலிகை செடிகளின் இருப்பே காரணமாகும். யாழ்ப்பாண இராச்சிய காலப் பரப்பில் ஆட்சி செய்த செகராசசேகரன் சிறந்த வைத்தியனாக தன்னை இனங்காட்டியதுடன் இத்தீவின் மூலிகை பரவலை விய ந்து மருத்துவமாமலைவனம் என அழைத்ததாக அறியமுடிகிறது. சிங்கள இலக்கியங்கள் சஞ்சீவி உலகம் எனப் பொருள் தரும் விதத்தில் அவகாலோகயா என அழைப்பது குறிப்பிடத்தக்கது. இராவணர், இராமர், அனுமன் கர்ண பரம்பரை கதையும் இதனுடன் தொடர்புபடுத்தப்படும் வழக்கமுண்டு.

இத்தீவு செந்தமிழ் தேசம் என அழைக்கப்பட்டமை பற்றி நோக்குகையில் சங்கத் தூயதமிழ் சொற்கள் மாறுபடாமல் பேச்சு வழக்கில் கையாளப்படுவதனூடு உறுதிப்படுத்தப்படுகிறது. சான்றாக இன்றும் படுவான். எழுவான். நாம்பன், நாகு, பகிர், மண்டி, அதா் (வாய்க்கால்), கடையால் போன்றே சொற்களை குறிப்பிடுவர்.

இன்று பரவலாக வழக்கிலுள்ள Delft எனும் பெயர், இத்தீவினைக் கண்ட ஒல்லாந்தர் இங்கு பசுக்கள், குதிரைகள் வளர்ப்பதற்கு ஏற்ற நன்னீரும் புல்வெளிகளையும் தம் தேசத்தில் காணப்படும் டெல்ப் புல்வெளியின் பெயரையே இத்தீவிற்கும் வழங்கி வந்தமை இன்று எல்லோர் மத்தியிலும் பழக்கப்பட்ட பெயராக நிலைத்து நிற்கின்றது.

III. **சமூகம்**

நெடுந்தீவின் சமூகபரம்பல் இந்தியாவுடன் நெருங்கிய தொடர் பைக் கொண்டது எனலாம். யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிங்கை ஆரியன் சனச்செறிவு குறைந்த இடங்களில் குடியேற்ற தலைப்பட்டதாகவும் அதற்குள் நெடுந்தீவும் உள்வாங்கப்பட்டது. இதனை கலாநிதி சி.க.சிற்றம்பலம் அவர்கள் தமது நூலில்

"சிங்கை ஆரியன்மகாராஜன்
சேய்யூர் இருமரபும் தூய்ய தனிநாயகன் என்னும்
வேளாளனை நெடுந்தீவில் குடியமர்த்தினான்" என யாழ்ப்பாண சனவேற்றம் பற்றி "யாழ்ப்பாண வைபவமாலை" எனும் நூலில் இடம்பெற்றுள்ளமையை குறிப்பிட்டுக் காட்டுவதும் தீவின் பூர்வீகத் தொன்மை பற்றி அறிய உதவுகின்றது. இன்றளவும் இங்கு வாழும் சில பகுதியினர் தம்மை தனிநாயக முதலியார் மரபினர் எனக் குறிப்பிடுவதும் இவ் வழியிலன்றோ! எனினும் பல்வேறு தொழிலில் ஈடுபடும் வர்க்கத்தினரும் மரபுரீதியாக வாழ்ந்து வருகின்றனர்.

IV. **பொருளாதாரம்:-**

நெடுந்தீவு மக்களின் பொருளாதாரத்தில் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, பனைசார் கைத்தொழில்கள் அரச சேவைத்

தொழில்களும் முக்கியம் பெறுகின்றன. அந்த வகையில் விவசாயத்திற்கு வேண்டிய நன்னீா் படுக்கைகள் ஏனைய தீவுகளில் போல மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. தீவின் கிழக்குப் பகுதி முருகைப் பாறைகளை மிகுதியாகக் கொண்டிருப்பதால் தரைக்கீழ் நீா் உவா்நீராக இருக்க, மேற்குப் பிரதேசம் கூழாங்கற் பாறைகளைப் பரவியுள்ள இடங்களில் நன்னீா் படுக்கைகளும் உள. தீவின் முழு நன்னீா்த் தேவையை மேற்குப் பிரதேச சாராப் பெட்டி (சாறாபிட்டி) தான் பூா்த்தி செய்கின்றது. மேற்குப்பகுதி பிரதான விவசாய குடும்பங்கள் வாழ்ந்து சிறுதானிய, மரக்கறிகள் உற்பத்தி செய்வதுடன் மாாி காலத்தில் நெல், சாமி விதைத்து பொருளாதாரத்தை ஈடுசெய்கின்றனா். அதேவேளை தீவை அண்டிக் கண்டமேடை காணப்படுவதால் மீனவ காலக்காற்று வீசும் தன்மைக்கேற்ப இடம்மாறி தொழிலில் ஈடுபடுவா்.

பண்டைய காலம் முதல் பனைபடு திரவியங்களை இத்தீவின் பொருளாதாரத்தில் முக்கியம் பெற்றமையை காணலாம். சுய தேவைக்கும், விற்பனைக்கும் அவற்றின் உற்பத்தி காணப்படும். பாய், கடகம், பெட்டி, சுளகு போன்ற கைவினை பொருள்களையும், பனங்காய்ப் பலகாரங்கள், ஒடியல்கள் என்பவற்றையும் உற்பத்தி செய்வதுடன் தீவிற்கு வெளியே ஏற்றுமதி செய்தும் நிறைந்த சம்பாத்தியத்தைப் பெற்றுக் கொள்கின்றனா். மேலும் நிறைந்த புல் வெளிகளையும் இயற்கையாகக் கொண்ட பிரதேசமாக விளங்குவதால் கால்நடைகளாக ஆடு, மாடு, செம்மறியாடு வளா்ப்பினூடாகவும் குறிப்பிடத்தக்க வருமானம் ஈட்டப்பட்டது. நெடுந்தீவில் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு பகுதியினா் அரச சேவையூடாகவும் வா்த்தக நிறுவனங்களை நிறுவியும் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனா்.

V. **கல்வி:-**

தீவின் கல்வி நிலமையானது ஐரோப்பியா் வருகைக்கு முன் பழைமையான திண்ணைப் பள்ளிகளினூடாக மேற்கூாில் பிடாாி கோயிலடி, கிழக்கில் கந்தசாமி கோயிலடி, நடுக் குறிச்சியில் ஆஸ்பத்திாியிலிருந்தும் குரு சிஷ்ய முறையில் கல்வி வழங்கப்பட்டதை அறிய முடிகிறது. எழுத வாசிக்கத் தெரிந்தால் போதும் என்ற வகையில் ஆரம்பக்கல்வி வழங்கப்பட்டது. அதைவிட புராணங்கள்,

இலக்கணங்கள் முதலியவற்றைக் கற்கும் வாய்ப்புக்களும் இருந்தது. இந்நிலை ஐரோப்பியர் வருகையின்பின் இடம், பொருள், ஏவல் என்பன நிலைமைகளில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்படலாயிற்று. மதம் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட இவர்கள் சுதேசிகளுக்கும் கல்வி வழங்கி மதம் மாற்றும் நிலை ஏற்பட்டது. இதனைச் சுதேச இந்துக் களின் கி.பி 1923இல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தால் மேற்கில் சைவப்பிரகாச வித்தியாலயத்தையும், கிழக்கில் சுப்பிர மணிய வித்தியாலயத்தையும் நிறுவி சைவக் கல்வியையும், சைவப் பாரம்பரியத்தையும் பேணலாயினர். இந்நிலை சுதந்திரம் (1948) வரைத் தொடர்ந்தது. அரசாங்கத்தால் பாடசாலைகள் சுவி காரம் செய்யப்பட்ட போது அனைத்துப் பாடசாலைகளும் உள்ள டக்கப்பட்டது. 1975இல் 12 பாடசாலைகள் இயங்கின. தற்காலத் தில் குடிப்பெயர்வு, மாணவர் பற்றாக்குறை, தூரஇடத்துக்கு வந்து கல்வி வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் அதிகாரிகளின் அக் கறையீனங்களும், இயலாமைகளும் எனப்பல்வேறு இடர்களை எதிர்கொள்கிறது. ஆனாலும் 1c தரப் பாடசாலைகளும் (சைவப்பிர காச பாடசாலை, மகாவித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர் மடம்) போன்றவையும் (மங்கயற்கரசியர் வித்தியாலயம், மாவிலிதுறை அ.த.க பாடசாலை போன்ற Type 2 தரப்பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இத்தீவின் மாணவர்கள் யாழ் குடாநாட்டுப் பாடசாலை களில் இணைந்து விடுதிகளிலிருந்தும் கல்வியை பெற்று வருவது டன் பல்கலைக்கழகம் வரையாகத் தமது உயர் கல்வியை பெற்று வருகின்றனர். இவை எதிர்கால சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக உள்ளது.

### VI. ஆன்மீகம்

தீவின் சனத்தொகைப் பரம்பலில் ஆரம்ப காலத்தில் சைவ சமயிகளே முழுவதும் காணப்பட்டமையை அங்கு கிடைக்கும் தொன்மையான சைவ ஆலய வரலாறுகளூடாக அறியலாம். ஐரோப்பியர் வருகைக்கு முன்பு பழமையான ஆலயங்களான நெழு வினிப் பிள்ளையார் ஆலயம், கிழக்கு மாவிலிதுறை வீரகத்திப் பிள்ளையர் ஆலயம், நடுக்குறிச்சிப் பிள்ளையார் ஆலயம், உயரம் புலம் ஐயனார் கோவில், ஆலமாவனப் பிள்ளையார் ஆலயம்

(காட்டுப் பிள்ளையார்), புக்காட்டு (புதுக்காடு) வைரவர் ஆலயம் என்பவற்றையும் போர்த்துக்கீசர் வருகையில் ஏற்பட்ட மதமாற்றக் கெடுபிடிகளின் தாக்கம் இத்தீவை விட்டு வைக்கவில்லை. இன்று தீவின் கிழக்குப் பகுதியில் காணப்படும் சுமார் பத்திற்கு மேற்பட்ட தேவாலயங்களில் எழுச்சி இதன் பிரதிபலிப்பேயாகும். ஐரோப்பி யரின் வருகையின் இந்துமதமும் சிதைந்து சிறுசிறு மறைவில் வழி பட்டு வந்தமை பின்நாளில் கிராமியக் கோயில்களானவிட்டமையை இன்று கொத்தியம்பாள், மொட்டையர், சுழிவைரவர், பப்பரர் (வைர வர்), நெடுங்குளம் ஞானவைரவர், ஈச்சம்புலவு மீனாட்சியம்மன், சங் கறாப்பட்டை ஞானவைரவர், கோயிலுத்தோம்பு நாயமா நாச்சியார், மாவிலத் துரைப்பிடரி அம்மன், ஆஸ்பத்திரியடி ஞான வைரவர், தண்டையம்பதி ஞானவைரவர், முனேந்திரக்காட்டு முனியப்பர் என சுமார் 15 இற்கும் மேற்பட்ட கிராமிய தெய்வங்களின் எழுச்சியும் தனித்துவமான வழிபாட்டு முறைமைகளும் வேரூன்றிக் காணப்படு கின்றன.

இன்று ஆகமமரபு தழுவிய உற்சவக் கோவில்களாக மேற்கூறிய நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், நெடுந்தீவு மேற்கு உயரப் புல ஐயனார் கோவில் (தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ள நிலை), கோவில்காடு பிடாரியம்மன் ஆலயமும், கரமத்தை கந்த சுவாமி ஆலயமும் நெடுந்தீவு மத்திய பகுதியில் பெருக்கடி ஸ்ரீ சித்திபுத்தி விநாயகர் ஆலயமும், நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் ஆலமாவன பிள்ளையார் (காட்டுப் பிள்ளையார்) கந்தசாமி ஆலய மும் சிறப்பாக தீவின் ஆன்மீக தேவையைப் பூர்த்தி செய்கின்றன. நெடுந்தீவு மேற்கின் புக்காட்டு வைரவர் ஆலயத்தருகே அண்மைய தொல்லியல் ஆய்வுகளினூடாக ஆலயப் படிமங்கள் கண்டெடுக்கப் பட்டு சோழர்கால சிவ ஆலய எச்சமாக இனங்கண்டிருப்பது இத் தீவின் தொன்மையான இந்து பண்பாட்டு மரபைத் தெளிவுபடுத்துவ தாக அமைகிறது.

### VII. வரலாற்று மையங்கள்

தீவினைச்சுற்றி பல்வேறு தொல்லியல் மையங்களும் சான்றா தார அம்சங்களும் நிறைந்து அதன் முக்கியத்துவத்தைப் பறை சாற்றுகின்றன. அந்த வகையில் தீவின் அழகிய பாறைக் கடற்கரை களும், குளியலுக்கேற்ற கடற்கரைகள் (மணலடி), ஒல்லாந்தர்கால

புறாக்கூடு, வீகாமன் கோட்டை, வெடியரசன் கோட்டை, 40 அடி மனிதன் பாதச்சுவடு, பெருங்கற்பண்பாடு ஈமைத்தினக் தாழியாக உள்ள பெரியதுறை மற்றும் மாவிலாதுறைமுகம், குதிரைலயங்கள், தொட்டிகள், சாராபிட்டிக் கிணறுகளும் அடியற்ற பெரிய ஆலமரம், பெருக்குமரம், குயிந்தா எனப்படும் ராணி கோபுரம், பகிர் எனப்படும் அழகிய கட்டங்கள், பருவகால வெளிநாட்டுப் பறவைகளின் புக ழிடங்கள், ஈச்சமரக்காடுகள், பனையடியண்டிய ஆலமரங்கள், எண்ணற்ற மூலிகைப் பற்றைகள் என சூரியோதயம், சூரிய அஸ்த மனம் போன்ற நிறைந்த தொல்லியல் வரலாற்று மையங்களும், பிறரைக் கவர்ந்திழுக்கும் சுற்றுலா மையமாகும். இத்தீவானது விளங்குவது எதிர்காலத்தில் சுற்றுலாவூடாக அந்நிய செல வாணியை உழைக்கும் திட்டங்களை நன்கு இங்கு நடைமுறைப் படுத்தப்படும் இடத்து தீவின் மீது மதிப்பும் பெருமையும் ஈர்ப்பு ஏற்படுவது திண்ணமே.

VIII. **போக்குவரத்து**

இத்தீவிற்குப் போக்குவரத்து தரை, கடல் இரு மார்க்கங்களிலும் இடம்பெறுகின்றது. வரலாற்று ரீதியாகத் தீவின் பிரதான இளங்கு துறைகளாக கிழக்கே மாவிலிதுறையும், மேற்கே பெரிய துறையும் விளங்குகின்றன. தற்போது மாவிலிதுறை பிரதான இடம் பெறு கிறது. உள்ளூர் சேவைகள், CTB பஸ், மாட்டுவண்டி, கால்நடை, மோட்டார் வாகனங்கள் ஊடாகவும், கடற்போக்குவரத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அரச படகான குமுதினியூடாகவும் MPCS சமுத்திர தேவியூடாகவும், தனியார் படகுகளூடாகவும் இடம்பெறுகிறது. நெடுந்தீவுக் கடற் போக்குவரத்து வரலாற்றில் துயரம் ஒன்று தீவக மக்களாலே மறக்க முடியாத சம்பவமாக வுள்ளது.

1985 மே மாதம்15ம் நாள் இடம்பெற்ற குமுதினிப் படுகொலை யாகும். இதில் 36 பேர் கொலை செய்யப்பட்டனர். அவர்கள் நினைவாக எழுப்பட்ட நினைவாலயம் மாவிலி துறையருகே காணப்படுகிறது.

IX. **சேவைமையங்கள்:-**

அரச தனியார் சேவை நிலையங்கள் அபிவிருத்திக்கான சேவையை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் பிரதான அரசினர் வைத்தியசாலை, பிரதான உபதபாலகங்கள், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நெடுந்தீவு பிரதேசசபை, பொது நூலகங்கள். பிரதான பொலிஸ் நிலையம், 8 அரச பாட சாலைகள், சமுர்த்திச் சங்கம், மின்சாரசபை வடபிராந்திய பஸ் சேவை, நீதவான் நீதிமன்றம், நெடுந்தீவு அரச சேவைகளாகவும், தனியார் இதர சேவை நிலையங்களாகவும் கிராமிய வங்கி (பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) சனசமூக நிலையம் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் (கனடா) தென்னிந்திய திருச்சபை கடல் தொழிலாளர் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், கணனி பயிற்சி நிலையம் போன் றனவும் தனியார் முயற்சியில் அமைந்த வர்த்தக மையங்களும் சமூக முன்னேற்றத்திற்கான சேவையை வளங்கி வருகின்றன.

X. **தீவின் வரலாற்றை அறிய உதவும் சான்றுகள்**

1. நூல்கள், சப்ததீவு (1979) தீவகன் (சதாசிவம் சேவியர்)
2. விஷ்ணுபுத்திரன் வெடியரசன் வரலாறு. (1988) அ.சிவப்பிரகாசம்
3. தீவகம் வளமும் வாழ்வும் (1994) Prof கா.குகபாலன்
4. தீவகம் பல்துறை நோக்கு (2000) Prof கா.குகபாலன்
5. நெடுந்தீவு மக்களும் வரலாறும் (2003) சு.சிவநாயகமூர்த்தி
6. வட ஈழ மறவர் மான்மியம் (1971) ஞா.செல்வராசா

**நூற்பட்டியல்**

ஈழத்து வாழ்வும் வளமும் (2001) 2வது பதிப்பு க.கணபதிப் பிள்ளை
யாழ்ப்பாண இராச்சியம் (1992) க.சி.சிற்றம்பலம்
யாழ்ப்பாண வைபவமாலை (1949) சபாகுலநாதன்

**நெடுந்தீவு சார் மலர்கள் :-**

1. 150வது ஆண்டு மலர் :- தென்னிந்தியதிருச்சபை (2005)
2. நெழுவினி சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் (1977)
3. கணநாதம் நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் வரலாற்று மலர்

4. நெடுந்தீவு ஆலமாவனப்பிள்ளையார் கோயில் மலர் கும்பாபிஷேக மலர் (2002)
5. மாவிலி மலர்கள் (நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா)
6. வெள்ளிவிழா மலர் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்)
7. தீபம் - நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் வெளியீடு
8. தீவின் அமரர்களின் கல்வெட்டுப்பதிப்புகள்

**ஆய்வுக்கட்டுரை :-**

1. யாழ்ப்பாண குடாநாட்டிற்கு அப்பால் உள்ள தீவுகளின் சமூக பொருளாதார நிலைகள் (முதுகலைமாணி ஆய்வு) செந்தில் வடிவேலு.ஆ (1985)
2. நெடுந்தீவின் குடிநகர்வு போக்குகள் (கலைமானி ஆய்வு) (1984) (குலதேவி.கு)
3. யாழ்ப்பாண நெடுந்தீவில் இந்துப் பண்பாடு (த.அமல்தாஸ்) (கலைமானி ஆய்வு) 2006
4. நெடுந்தீவு பிரதேச நாட்டார் வழக்காற்றியல் (ச.காந்திமதி) (கலைமானி ஆய்வு) 2006

**பத்திரிகைக் கட்டுரைகள் :**

1. நெடுந்தீவு வெடியரசன் கோட்டை (தினகரன்) 1976
2. நெடுந்தீவு தொலைதூரதீவா : தொலைந்து போகும் தீவா? ஆத்மாமாத இதழ் (2004)
3. நெடுந்தீவின் சரித்திரக் கதைகள் (ஸ்ரீலங்கா 1995)
4. நெடுந்தீவு ஈழத்தின் காவல் தளம் (தினகரன் 1969)

**பிறகுறிப்பு**

1. நெடுந்தீவு ஆச்சி (கவிஞர் ச.ஜெயபாலன்) கவிதை வெளியீடு
நெடுந்தீவு லக்ஸ்மன், நெடுந்தீவு முகிலன், கமலதீவான் போன்ற புனைபெயர் ஆக்க வெளியீடுகள்
நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தன் தலபுராணம்
நெடுந்தீவு மேற்கு நெழுவினி விநாயகர் ஊஞ்சல் } ஆ.சுப்பிரமணியம்
நெடுந்தீவு ஆலமாவன சிந்து (இராமநாதன்.சோ)
நெடுந்தீவு தெற்காட்டு முத்துமாரியம்மன் பதிகம் (ந.நடராஜா)

# அனலைதீவு

## *தகவற் களஞ்சியம்*

- அனலைதீவின் பிரதான ஆலயமாக ஐயனார் ஆலயம் விளங்குவதுடன் பிள்ளையார், சிவன், அம்மன் (4), முருகன் (2), விஸ்ணு மற்றும் வைரவர் ஆலயங்கள் பலவும் காணப்படு கின்றன.

- அனலைதீவின் வடக்கே காணப்படும் கலங்கரை விளக்கம் (வெளிச்சவீடு அல்லது மதிய கட்டை) ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டு 1930களில் பிரிட்டிஸ்காரர்களால் புனரமைக்கப் பட்டது.

- அனலைதீவின் பிரதான குளங்களாவன நயினைகுளம், வேலன் குளம், பெருக்கடிக்களம், தரவைக்குளங்கள் என்பனவாகும்.

- அனலைத்தீவு மத்தி சமூகநிலையம் 1954ல் இந்து இளைஞர் களால் ஸ்தாபிக்கப்பட்டது.

- அனலைத்தீவு வடக்கு சமூகநிலையம் காந்தி நிலையம் என்ற பெயரில் ஆரம்பத்தில் இது இளைஞர்களால் ஸ்தாபிக்கப் பட்டது.

- நாவலர் முன்பள்ளி 1968 இல் நிறுவப்பட்டது. இதற்கு மாதர் முன்னேற்ற சங்கம் உதவி வழங்கியது.

- அனலைதீவு மாதர் அபிவிருத்தி சங்கம் 1969இல் ஸ்தாபிக் கப்பட்டது.

- அனலைதீவு அரசினர் நெசவுசாலை 1949இல் ஆரம்பிக்கப் பட்டது.

- அனலைதீவு அரசினர் வைத்தியசாலை 1942இல் ஆரம்பிக் கப்பட்டது.

- அனலைதீவு உபதபால் அலுவலகம் 1934 இல் ஆரம்பிக் கப்பட்டது. 1977இல் 2ம் தர தபாலகமாக தரம் உயர்த்தப் பட்டது.

- அனலைதீவின் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியரும், கிராம சங்கத் தலைவரும் திரு.அ.சின்னப்பா ஆவார்.

- அனலைதீவின் முதலாவது வைத்திய அதிகாரியாக 1வது உலக யுத்தத்தின் போது மலேசியாவில் மருத்துவ கல்விகற்ற அனலைதீவின் Dr.I.சோமசுந்தரம் ஆவார்.

- அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் 1890 இல் சின்னப்பா உபாத்தியாயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அரசினால் 1948, 1949களில் ஆரம்ப பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

- அனலைதீவின் விசேட கிரியைகள் அந்தணக் குருமணி களான ஊரெழுவைச் சார்ந்த சிவஸ்ரீ சதாசிவ குருக்கள், பால சுந்தரக் குருக்கள், வைத்தியநாத குருக்கள் இவர்களின் வழித் தோன்றல்களால் இன்றும் நடாத்தப்பட்டு வருகின்றது.

- இலங்கையின் மிகப்பெரிய சித்திரத்தேர் அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் உள்ளது. இது 38 அடிகளைக் கொண்டது. இதன் தரிப்பிடம் (தேர்முட்டி) 41 அடிகளைக் கொண்டது.

- அனலைதீவு ஐயனார் ஆலய அன்னதானசபை 1945இல் அரோகரா கந்தன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஐய னாருக்கான புதிய பாரிய அன்னதான மடம் 1972இல் கட்டப் பட்டது.

- ஐயனாருக்கான புதிய தேர் 1976இல் கட்டத் தொடங்கி 1980 ஆவணி 21இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. ஐயனாரின் தீர்த்தக்கரை மடம் ஏ.கந்தையா அவர்களால் 1937 ஸ்தாபிக்கப் பட்டது.

- தீவகத்தில் அனலைதீவு, புளியந்தீவு, நெடுந்தீவு ஆகியவற்றில் அனுமனின் பாதச் சுவடுகள் பாறைகள்மீது காணப்படுகின்றது.

- அனலைதீவின் முதல்க் கவிஞராக மதிக்கப்பட்டவர் திரு.ஐயம்பிள்ளை ஆறுமுகம் அவர்களாவர். இவரே அனலைதீவின் அனைத்து ஆலயங்களுக்குமான திருவூஞ்சல் பாடல்களை பாடியுள்ளார்.

- அனலைதீவின் முதல் தமிழ்ப் பண்டிதர் பட்டத்தைப் பெற்றவர் திரு.பசுபதி கணபதிப்பிள்ளை ஆவார்.

- அனலைதீவின் முதல் பெண் ஆசிரியை திருமதி.சியாமளாவள்ளி கணபதிப்பிள்ளை ஆவார்.

- அனலைதீவில் இசைத்துறையில் அரங்கேற்ற நிகழ்வினை செய்தவர் சறோஜினி (சபாநாதன்) குமாரசாமி இவர் வயலின் கல்வியை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டதாரியானார்)

- அனலைதீவின் பெரும் துயராக கருதப்படுவது 1990இல் இடம்பெற்ற கடல் விபத்து. இது அனலைதீவிலிருந்து றோலர் படகு மூலம் இராமேஸ்வரம் நோக்கி பயணித்த போது விபத்துக் குள்ளாகியது இதில் ஒரு சிலரை தவிர 51 பேர் பரிதாபகரமான மரணத்தை தழுவியிருந்தனர்.

- பிரிட்டிஸ் மகாராணியிடம் விருது பெற்ற அனலையர் என்ற பெருமையினை திரு.சுப்பிரமணியம் சண்முகம் என்ற பொறியிய லாளர் பெற்றுக் கொடுத்தார் "பிரித்தானிய இராஜ சேவகன்" (O.B.E) என்ற உயரிய விருதுவே அதுவாகும். இது 1997 இல் வழங்கப்பட்டது. இலண்டனின் பாரிய பாலங்கள், சுரங்கப் பாதை கள் நிர்மானிப்பது தொடர்பான திட்டமிடல் மற்றும் செயற்பாடு கள் தொடர்பில் அவ்விருது வழங்கப்பட்டது.

- இலங்கை மான்மியம் எனும் பாசுரத்தில் நாகேஸ்வர மான்மியம் எனும் பாடல் தொகுதி புளியந்தீவு நாகேஸ்வரம் பற்றி கூறி நிற்கிறது.

- பண்டைய அட்ட ஈஸ்வரங்களுள் நாகேஸ்வரமும் ஒன்றாகும். ஏனையவை கேதீஸ்வரம், கோணணேஸ்வரம், தொண்டீஸ்வரம், நந்தீஸ்வரம், நகுலேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், முன்னேஸ்வரம் என்பனவாகும்.

- அனலைதீவு பொது நூலகம் 1978ம் ஆண்டுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்வாகம் கிராம சபையிடம் காணப் பட்டது. (V.C) அதன் பின்னரே அரசினர் மயமாக ஊர்காவற் றுறை பிரதேச சபையின் கீழ் செயற்பட தொடங்கியது.

- அனலைதீவின் கிராம நிர்வகம் காலணித்துவ காலத்திலும் அதன் பின்னரும் முதலியார், உடையார் போன்ற சமூகத் தலை வர்களாலும் கிராம சபை (Villege Council கம்சபா) கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக நிர்வகிக்கப்படுகிறது.

- 1970கள் வரை எழுவைதீவானது அனலைதீவின் கிராம நிர்வாக எல்லையினுள் அடங்கியிருந்தது.

- 1976இல் பருத்தீவானது இலங்கை வன இலாகாவினால் பாது காக்கப்பட்ட வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

- அனலைதீவின் பிரதான இறங்குதுறை (துறைமுகம்) கிழக்கு கோட்டையில் அமைந்துள்ளது. இதன் வரலாற்று பெயர் ஐயனார் இறங்குதுறை என்பதாகும்.

- தீவுப் பகுதிகளுக்கான இயந்திரப் படகுச் சேவையானது 1940 களில் ஆரம்பமானது. அதற்கு முன்னர் பாய்மரப் படகுகளும், வத்தைகளும் புழக்கத்தில் இருந்தன. கடந்த காலத்தில் தீவுப் பகுதிக்கான கடற் போக்குவரத்து வசதிகளினை தீவக ஐக்கிய நாணய சங்கம் நடாத்தி வந்தது.

- குமரிக்கண்டத்தின் எச்சங்களான தீவுப் பகுதிகளின் கடல் நீரோட்டங் களானது ஏழாற்று பிரிவு என அழைக்கப்படுகிறது. இது பண்டைய ப∴றுளி ஆற்றுப்படுக்கைப் பாதை ஆதலால் இப்பெயர் ஏற்பட்டது.

- அனலைதீவை பிறப்பிடமாகவும் கொண்ட திரு.ந.சதாசிவ ஐயர் யாழ் மாவட்ட காணிப்பதிவாளராகவும் தற்போது கொழும்பில் மேலதிக மாவட்ட பதிவாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

- அனலைதீவில் முதல் கவியரங்கத்தை நடாத்தியவர் திரு.ஆ.இராசேந்திரம் ஆவார். இவர் சிறந்த புலம்பெயர் எழுத் தாளராக திகழ்கின்றார்.

- திரு.பொன்னம்பலம் பாலசிங்கம் அவர்கள் யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளராகவும் கிழக்கு மாகாண செயலாளராகவும் தொழிற்பட்டிருந்தார்.

- திரு.பொன்னம்பலம் பரமலிங்கம் அவர்கள் NATCO FOODS எனும் சர்வதேச வர்த்தக நிறுவனத்தின் முகாமையாளராகவும், சுவாமி இராமதாஸ நிறுவனம், மற்றும் ஆனந்தசாகரம் ஆகிய வற்றின் இயக்குனர் ஆகவும் விளங்குகின்றார்.

- அனலைதீவின் சிறந்த அரசியல் விமர்சகராகவும் பேச் சாளருமாக திகழ்கின்றவர் திரு.சி.காராளப்பிள்ளை அவர்கள் ஆவார்கள்.

- அனலைதீவின் மூத்த ஊடகவியலாளராக விளங்குகின்ற வர் திரு.க.காசிலிங்கம் என்பவர் ஆவார்.

- அனலைதீவுக்கான மானிய இயந்திரப் படகுச்சேவை 1978 அலையரசி எனும் பெயரில் இயங்கியதுடன் தேவரதம் எனும் படகுச்சேவையும் அரசினரால் நடத்தப்பட்டது.

# தீவகத்தின் சுற்றுலா மையங்கள்

## நெடுந்தீவு

பெயருக்கேற்ற யாழ்ப்பாண குடாவின் சப்ததீவுகளில் தனித்து பெரியதும் அண்டை நாடான இந்தியாவின் தமிழ் நாட்டிற் கும் இடையே இந்து சமுத்திரத்தில் சிறப்பான இடஅமைவைக் கொண்டது சுமார் 45Km பரப்பையுடைய அழகியதும், தொன்மை யான வரலாற்று மரபையும் உடைய இத்தீவு ஒரு சிறந்த சுற்றுலா மையமாக இனங் காணப்படுகிறது. இத்தீவினை நாடி வரும் இலங்கைத் தீவினர்க்கும், பிறநாட்டினர்க்கும் அம்மையங்களை இனங்கண்டு அறிந்து கொள்ளும் வகையில் பின்வரும் விடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

**வெடியரசன் கோட்டை:-**

நெடுந்தீவின் மேற்கு பகுதியில் இன்று "கோட்டைக்காடு" என அழைக்கப்படும் பகுதியில் இவ் இடம் உள்ளது. வெளி கொண்ட பிரதேசங்களாக இருந்த புத்தளம், மன்னார், விடத்தற்தீவு, நெடுந்தீவு போன்றவற்றிற்கு அரசனாக இருந்த வெளியரசன் கால திரிபால் வெடியரசன் எனலாயிற்று. இம்மன்னன் தனது ஆளுகை க்குட்பட்ட மையங்களைக் கண்காணிக்க தாமரை வடிவிலான கோட்டையை மேற்குக்கடற்கரைப் பகுதியை அண்டி உயரமாக அமைத்து இருந்தான் என வரலாறுகளும் ஐதீகங்களும் நிலவு கின்றன. சான்றாக பல கோட்டை இடிபாடுகள் உள்ளன. இப் பிரதேசத்தில் உடைந்த குத்துவிளக்கின் பகுதிகள், தங்க ஆபரண சிறுதுண்டுகள் பொழிந்த கற்தூண்களை நிறுத்துதற்கான சான்று கள் கிடைத்ததாகவும் அறிய முடிகிறது.

**பெரிய துறை:-**

நெடுந்தீவின் பண்டைய வாணிப தொடர்புகளும் ஏனைய போக்குவரத்துக்களும் வெடியரசன் காலம் தொட்டுப் பயன்படுத்த ப்பட்டு வந்த பழைமையான துறைமுகமே இதுவாகும். இதுவும் நெடுந்தீவின் பிரதான மேற்குப் பகுதி வீதியில் நேரே வரும் பாதை யில் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இது இயற்கையா

கவே அமைந்த துறைமுகமாக அமைப்பும் அழமான கடற்கரை பகுதியும் உடையதாகிறது. பண்டைய மூதாதையர் இராமேஸ்வரத் திற்கு பால், பூ போன்ற ஏற்றியனுப்பப்பட்ட "பூமுனை" பகுதியும் காணப்படுகிறது.

**உயரப்புலம் ஐயனார் கோவில்:-**

வெடியரசன் தன் இஸ்ட தெய்வமான ஐயனார்க்கு தீவகத் தின் எல்லைக் கரைகளில் எல்லாம் ஆலயங்கள் அமைத்து இருந் தான் அவ்வாறே அவன் கோட்டைக்கு அருகேயும் பழைமையான மேற்படி ஆலயம் காணப்படுகிறது.

**ஒல்லாந்தர் கோட்டை:-**

நெடுந்தீவின் சனவேற்றம் ஆரம்பத்தில் மேற்கு பகுதியிலே ஆரம்பித்த போதும் அந்நியர் வருகையுடன் கிழக்கு, மத்திய பகுதி களிலும் செறிவாகின. அந்த வகையில் ஒல்லாந்தர் தமது தீவகங்க ளுக்கான காவல் தளம் ஒன்றை நெடுந்தீவின் மத்திய பகுதியில் தற்போதைய அரசினர் வைத்தியசாலையின் பின்புறப் பகுதியில் வடகடல் ஓரமாக அமைத்துள்ளமையைக் காணலாம். இக் கோட்டை உயரமான காவல்தளமாக அமைந்து உள்ளமையானது ஓர் கண்காணிப்பு மையமாக அவர்களால் பயன்படுத்தப்பட்டிருப் பதை எமக்கு காட்டுகின்றது.

**புறாக்கூடு:-**

அந்நியர் ஆட்சியில் தீவிற்கு வெளியே தொடர் பாடலைப் பேணும் நோக்குடன் தற்போதைய உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு அருகே அமைந்துள்ள புறாக்கள் வந்து தங்கச் சுண் ணாம்பு கற்களால் அமைக்கப்பட்ட அழகிய புறாக்கூடு காணப்படு கிறது. இது புறா மூலம் அஞ்சல் தொடர்பாடல் செய்யப்பட்டிருப் பதை அறிவிப்பதாக உள்ளது.

**அடியற்ற ஆலமரம்:-**

நெடுந்தீவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஆலமாவனப் பிள்ளையார் கோவில் தலவிருட்சமே மேற்படி ஆலமரமாகும். சுமார் 3 ஏக்கர் விஸ்தீரணத்தில் விழுதுகளில் தாங்கியவாறு கிளைபரப்பி

உள்ள மேற்படி மரத்தின் அடியைக் கண்டு பிடிக்க முடியாதுள்ளது. தன் விழுதுகளில் மட்டுமே தாங்கியுள்ளது. 250 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கூறப்படுகிற பழைமையான ஆலயத்தின் தல விருட்சமாயுள்ள மரம் பார்ப்போர் யாவரையும் ஒருகணம் மலைக்க வைக்கும் சிறப்புடையது. அவ் ஆலய கற்பக்கிரகத்திற்கும் நான்கு பக்கமும் வாயிலுடைய தனித்துவம் கொண்டதாக விளங்குகிறது.

**இராணிகோபுரம் (குயின்தா)**

மேற்படி ஆலமரப்பிள்ளையார் கோவில் ஆலமரத்தை பார்த்து விட்டு தீவின் தென்கீழ் கடற்கரைவரை (1Km) சென்றடையும் போது எம்மை Queen Tower வரவேற்கும். இது ஆங்கிலேயரின் சாம்ராச்சியத்தின் விரிந்த எல்லையின் அடையாளச் சின்னமாக கட்டப்பட்டுள்ளது. செவ்வக வடிவமும் சுமார் 35 அடி குறையாத உயரமும் உள்ள கோபுரத்தின் கீழ்ப்பகுதியில் 4 அடி அகலமும் 7 அடி உயரமும் உடைய பாதை விடப்பட்டுள்ளது. கோபுரத்தின் நடுப்பகுதியிலிருந்து சுமார் 5x10 அங்குல இடைவெளி கொண்ட துவாரம் விடப்பட்டுள்ளது. இது நிச்சயமாக வெளிச்சவீடு அல்ல என்பது தெளிவாவதுடன் சமுத்திரத்தில் செல்லும் கப்பல்கள் தீவை அடையாளம் காணும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளமை புலனாகிறது. இக்கோபுரம் சூரிய ஒளியில் துலாம்பரமாக தெரிகிறது. இக்கோபுர நடுத்துவாரத்தின் ஊடாகவிடும் கடதாசிகள் காற்றின் துண்டுதலால் மேல்பற்றி செல்வதும், கோபுர நடுவின் உள்ள பாதையில் வரும் கடற்கரை காற்று எழுப்பும் ஓசையும் மனதையும் உடலையும் நெருடுவதை அங்கு செல்லும் ஒவ்வொருவரும் அனுபவிக்கலாம். இக்கோபுரம் காற்றின் திசை, வேகம் என்பவற்றை கணிப்பதற்காக அமைக்கப்பட்டு இருக்கலாம்.

**வெட்டுக்களி:-**

நெடுந்தீவு மத்தியில் அமைந்த பாரிய நீர்த்தேக்கமே வெட்டுக்களி எனப்படுகிறது. இதுவும் அந்நியர் ஆட்சியில் தீவிற்கு ஏற்பட்ட அவல நிலையின் குறியீடாக விளங்குவதை காணலாம். அந்நியர் தம் குதிரைகளை நுளம்பு, ஈ தொல்லைகளிலிருந்து பாதுகாக்கவும் குளிப்பாட்டுவதற்காகவும் தரையை வெட்டி கடல் நீரை உள் விடுவதற்காக செயற்கையாக உருவாக்கினார். செயற்கை

யாக கடல் நீரை உள்ளே விட்டதுமட்டுமன்றி பொம்மை தாராக் களையும் அதில் நீந்தவிட்டு சைப்பீரிய தாரா, கொக்கு பருவகால வெளிநாட்டு பறவைகளை இங்கு தரிக்கச் செய்து வேட்டையாடிக் கொள்ளவும் இத்தேக்கத்தை உருவாக்கினர் தீவின் நன்னீர் வளம் சீர்கெடவும் விவசாய மக்களின் வாழ்வியல் சூழல் பெரிதும் பாதிக்கப்படவும் இச் செயற்பாடு காரணமாயிற்று. தற்காலத்தில் தடுப்பணைகள் அமைக்கும் முயற்சி ஏற்படுத்தப்பட்டு வருவதுடன் நன்னீர் ஆக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அழுக்கற்ற தூய வெள்ளை நிறக்களியைக் கொண்டு காணப்படுவ துடன் மாரிகாலத்தில் நீர் சேமிக்கப்பட்டு வரட்சி காலத்துக்கான சாந்தி நிலையமாகவும் விளங்கும் காட்சி ரசித்தற்குரியது.

**குதிரைகளும் லயங்களும்:-**

தீவின் தனித்துவமே கூட்டங்கூட்டமாக சுதந்திரமாகத் திரியும் குதிரைகளே எனலாம். சுமார் 1000 - 1500 எண்ணிக்கை களின் சிவந்த, செந்நிற, கருமைநிற குதிரைகள் தீவைச்சுற்றி உலா வருகின்றன. இக்குதிரைகள் அந்நியர் வருகைக்கு உட் பட்டே காணப்படுகின்றன. நெடுந்தீவின் தற்போதைய இறங்கு துறைமுகமே மாவிலி (மா-குதிரை) எனப்பட்டமையானது காரணம் எனக்கொள்வதில் தவறில்லை. இங்கு குதிரை வாணிபம் சிறப்பாக நடந்தமையை கோடி காட்டும். இன்று குதிரைகளைப் பொதுச் சொத்தாகக் கருதி பாதுகாக்கும் நடைமுறைகள் வந்துள்ளன. எனினும் சிலர் சிலவற்றிற்கு உரிமை பாராட்டி வளர்ப்பதும் அவற்றை குதிரை சவாரி, கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கும் பயன்படுத்துகின்றனர். பத்து வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆண் மகனும் சவாரி செய்யும் திறன் பார்ப்போரை வியக்க வைக்கும்.

குதிரைகளைப் பராமரிக்க என ஐரோப்பியர் இங்கு அமைத்த குதிரை லயங்களும் தொட்டிகளும் குதிரை வண்டிகளின் பாகங்களும் எச்சங்களாய் உள்ளன. சுமார் 50 மேற்பட்ட லயத்தின் தூண்கள் தடயங்களாக காணப்படுகின்றன.

## சாறாப்பிட்டி நன்னீர்க் கிணறுகள் (பூதக்கிணறுகள்):-

தீவின் பிரதான வீதி வழிவரும் தென்மேற்கு பகுதியில் அமைந்த நன்னீர்க் கிணறுகள் இதுவாகும். சுமார் பத்து வரையான பாரிய கிணறுகள் உ ள்ளன. வெறும் கோளாம் கற்களையே உடைய(சாறமுடியாத) நிலப்பகுதியில் பண்டைய முதாதையர் உடல் வலுவுடன் வாழ்ந்து மேற்படி கிணறுகளைப் பொழிந்துள்ளமையை காணலாம். தீவின் முழுப்பகுதிக்குமான நன்னீர்த் தேவைக்காக உபயோகப்படுத்தும் வகையில் 4 கிணறுகளை கால்வாய் ஊடாக இணைத்து பிரதான கிணறு ஒன்றினூடான பம்பினூடாக நீர் விநியோகம் செய்யப்படுகிறது. பாறைகளில் அமையப் பெற்ற இக்கிணறுகளை பூதம் வெட்டிய கிணறுகள் என்றும் வழங்குவர்.

## பாதச்சுவடு:-

நெடுந்தீவு சாறாப்பிட்டிக் கிணறுகளுக்கு அருகே ஸ்ரீஸ் கந்தா வித்தியாலயத்தின் எதிரே 40 அடி மனிதனின் பாதச்சுவடு என கூறப்படும் வடிவம் காணப்படுகிறது. அதேபோல் குழந்தையின் பாதச்சுவட்டை ஒத்த சிறிய வடிவம் மங்கையற்கரசி மகேஸ்வரி வித்தியாசாலைக்கு அருகேயுள்ள வளவினுள் காணப்படுகிறது. இச்சுவடுகள் திருத்தமாக அமையாது உள்ள போதும் காலங்காலமாக இருந்து வரும் வாய்மொழி மரபு நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் அமைந்தனவாகும்.

## கடற்கரைகள்:-

தீவினை நாடி வருவோர்க்கும் அங்கு வசிப்போர்க்கும் தீவைச் சுற்றி அமைந்த கடற்கரைகள் சிறந்த இயற்கைக் குளியலுக்காக திறந்தே உள்ளன. ஆயினும் வடகடல் பகுதியான மணலடி எனப்படும் பிரதேசம் (ஆஸ்பத்திரியின் பின்புறம்) சிறந்த மணல் கடற்கரையாக குளியலுக்கு ஏற்றதாக உள்ளது. அதே போல் தீவின் தென்பகுதியில் வெல்லை (வெள்ளை கடற்கரை யானது) தூய வெண்ணிற மணல் உடைய கடற்கரையாக விளங்கு கின்றது. இவ் இரு கடற்கரை பகுதிகளும். சுற்றிலாப் பயணிகளைக் கவரும் சிறந்த இடமாக உள்ளன. தீவினைத் தரிசிக்கும் ஒவ்வொருவரும் இதமான குளியலை அனுபவரீதியாக உணரலாம்.

**மூலிகைப் பற்றை:-**

தீவின் குடியிருப்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் எல்லாம் பரந்து சித்த வைத்திய மூலிகைத் தோட்டங்கள் இயற்கையாகக் காணப்படுகின்றன. குறிப்பாக கத்தாளைச் செடி பற்றையாக உள் ளது. (தலையில் பூசும் தைலம் Gelன் மூலப்பொருளாக பயன்படுத் தப்படுவது இக்கற்றாளை ஆகும்.)

**கச்சதீவு யாத்திரை:-**

நெடுந்தீவுக்குட்பட்ட பகுதியில் பங்குனி மாதத்தில் இடம் பெறும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் சிறப்பாக இலங்கை இந்திய மக்களின் உறவுப் பாலத்திற்கு வருடாந்தம் வித்திடுகிறது.

**பெருக்கு மரம்:-**

நெடுந்தீவு தற்போதைய மாவிலி துறையிலிருந்து கிழக்கே செல்லும் பிரதான வீதி வழியே 2Km தூரம் சென்றதும் எமக்கு புதினமாக அடிபெருத்துக் காணப்படும், இலைகள் குறைந்த ஓர் விசித்திர குகை போன்ற அமைப்புடைய மரம் ஒன்றைக் காண முடிகிறது. மேலைத்தேசத்தவரின் வருகையுடன் தீவிற்கு அறிமுக மாகிய மரங்களில் இதுவும் ஒன்றாகக் கருதுவர். இவ்வகை மரங் கள் வரட்சி காலத்தில் தேவையான நீரை மாரி பால் தன் தண்டில் சேமித்து வைக்கும் ஆற்றலுடையன. (Rain Storage Tree) இலங்கை யில் மன்னார் மற்றும் சில இடங்களிலேயே இவ்வகையான மரம் காணப்படுவதுடன் இம் மரம் ஐந்து அல்லது ஆறு பேர் சேர்ந்து கட்டி பிடிக்க முடியாதளவு பருமனுடையது. இம்மரம் மார்ச் ஏப்ரல் காலங்களில் பூக்கின்ற போதும் விதைகள் உண்டாகி இனம் பெருக்குவதற்கான ஏதுக்களை காண முடியாதுள்ளது. இவ்வாறான மரம் எங்கிருந்து கொண்டு வரப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டது எனக் கூற முடியாதுள்ளது.

## பிறதீவுகள்

**1. வேலணை**

சுடுமண் தாழி,

வரலாற்றுப் பாடசாலை (Central College)

**2. புங்குடுதீவு**

குறிகாட்டுவான் துறைமுகம், நீண்ட பாலம் (வாணர்பாலம்)

**3. நயினாதீவு (சர்வ மதத்தீவு)**

பிரதான துறைமுகம் (அம்பாள்)

நாகபூஷணி அம்மன் கோயில்,

விகாரை (நாகதீபம்)

பூர்வீக முஸ்லீம் பள்ளி,

கிறீஸ்தவ தேவாலயம்

**4. ஊர்காவற்றுறை :**

வரலாற்று துறைமுகம் (ஊராத்தோட்டை துறைமுகம்)

கடல்கோட்டை, சாட்டி வெள்ளைக்கடல், சின்னமடு, மகூதி

**5. காரைநகர் :**

- ஈழத்து சிதம்பரம்
- கசூர்னா கடற்கரை
- வெளிச்சவீடு

**6. மண்டைதீவு :**

அலுமினியம் தொழிற்சாலை,

இறால் வளர்ப்பு,

பறவைகள் சரணாலயம்

**7. அனலைதீவு (சைவமணித்தீவு)**

- ஐயனார் ஆலயம் (இலங்கையில் மிகப்பெரிய ஐயனார் ஆலயம்)
- ஐயனார் ஆலய சித்திரத்தேர் (இலங்கையின் மிகப்பெரிய சித்திர (சிற்ப) தேர் சுமர் 38 அடி
- வெளிச்சக்கூடு (Light House)
- புளியந்தீவு நாகேஸ்வரம் (பண்டைய ஈஸ்வரங்களில் ஒன்று)
- பருத்தீவு (பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி)
- வரலாற்றுப் பாடசாலை 125 ஆண்டுக்கு முற்பட்ட சதாசிவ மகா வித்தியாலயம்

# புலம்பலும் தேற்றமும்

அன்புக்கு அர்த்தமாகி - நம் வாழ்விற்கு
ஆதாரசக்தியாகி நின்றீர்கள் அப்பா
இன்று நீங்கள் இறைவனுடன் இணைந்துவிட்டீர்கள் -அவன்
பாதாரவிந்தங்களை பணிகின்றோம் ஆத்மசாந்திக்காக!

பண்புக்கு பாத்திரமாய் - எம்வாழ்விற்கு
இலட்சிய வழிகாட்டியாய் இருந்தீர்கள் அப்பா
கண்முன் நீங்கள் இல்லையாயினும் - எமை
நல்வாழ்வு வாழ வாழ்த்துவீர்கள் விண்ணுலக கடவுளாக!

மருமக்கள் பேரப்பிள்ளைகள் சுற்றமும் உறவும் - கூடவே
ஊரும் உலகமும் உங்களை நேசிக்க
யாரும் நினையா தருணமதில் நீள்துயில் கொண்டீரோ நாங்கள்
யாவரும் வணங்குகின்றோம் உங்கள் ஆத்மா சாந்திக்காக!

படைத்தவன் கடவுள் விதித்தவன் விதியை
காப்பவன் கண்ணன் கூறிய கீதையையும் எண்ணி -எம்மனதை
தேற்றுகின்றோம் உம் மெய்மட்டுமே தீயுடன் சங்கமம்
ஆற்றுகின்றோம் எமை உங்கள் நித்திய வாழ்விற்காக!

ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

**குடும்பத்தினர்**

## அமரர் திரு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் குல வரலாறு

உலகப்பந்தின் புறவுருவத் தோற்றத்தே இந்து சமுத்திர பிராந்தியத்தில் சிறுதீவாக இலங்கை விளங்கிய போதும் அதன் அமைவிடம் வரலாற்றுக்காலங்கள் தொடங்கி இன்றுவரை உப கண்ட மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியத்துவத்தினை குடி யேற்றம், வர்த்தகம், படையெடுப்புகள் படைப்பல உதவிகள், பாது காப்பு அதன் இடைத்தங்கல் மையம் போன்ற பல்வேறு வகி நிலைகளைப் பெற்று வந்துள்ளது. இந்நிலைமை இன்றும் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இலங்கைத் தீபகற்பமானது அதன் பல் இன மக்களின் வாழ்க்கைக் கோலங்களுக்கு அமைவாக இருவேறுபட்ட இனங்களின் தாயகப் பிரதேசமாகப் பிரிந்து காணப்படுகின்றது. இருந்தும் தமிழ், சிங்கள இனங்களின் தோற்றுவாய் இந்தியாவின் தென்பகுதிகளில் இருந்தே ஆரம்பிக்கின்றது. என மானிடவிய லாளர் கருதுகின்றனர். அந்த வகையில் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் இருப்பானது இயக்கர், நாகர் என்கின்ற ஆதிக் குடிகளையும், வன்னியர்கள் என்ற இனக் குழுமத்தின் இருப்புக் களையும் அடிப் படையாகக் கொண்டது தவிர ஏனைய தமிழர் களின் பூர்வீகம் என்பது தென்னிந்தியாவின் சேர சோழ பாண்டிய மண்டலங்களில் இருந்து உற்பத்தியாகின்றமை என்பது குறித்த வரலாற்று தகவல்கள் மற்றும் செவிவழி உசாவல் மூலம் உறுதி யாகின்றது.

வரலாற்றுக் காலந்தொட்டு இலங்கையின் பிரதான இரு இனங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த உறவுகள் மற்றும் மோதல்கள் தென்னிந்தியாவின் மூவேந்தர்களின் உதவிகளை அல்லது படை யெடுப்புகளை இலங்கை மீது விருப்பின் பெயரிலோ அல்லது வலி ந்தோ மேற்கொள்ளத்தூண்டியது. இதற்கான மூலமாக இலங்கை யின் வடக்குக் கிழக்கு பிராந்தியங்கள் துணைநின்றன. அதிலும்

தீவகம், மன்னார் என்பன தென்னிந்தியாவுடன் தொடர்பினைப் பேணுவதற்கு ஏதுவாக விளங்கிய புவியியல் காரணி எனலாம்.

தீவகம் எனும் போது அதில் நெடுந்தீவானது யாழ்ப்பாணத் திலிருந்து 45Km தூரத்திலும் இராமேஸ்வரத்திலிருந்து 38Km தூரத்திலும் அமைந்திருந்ததால், தென்னிந்தியாவுக்கும் நெடுந்தீ விற்கும் இடையிலான இடைத் தூரம் குறைவாகவே காணப்ப ட்டதால்,அவற்றுக்கிடையிலான உறவுகள் அதிகமாகவே காணப் பட்டது. பசுந்தீவு, பால்த்தீவு, மூலிகைத்தீவு, நெடுநகர் என பல் வேறு சிறப்பு பெயர் பெற்ற நெடுந்தீவானது இராமேஸ்வரம், திருநெல்வேலி, தனுஷ்கோடி, சிதம்பரம், திருச்செந்தூர் ஆகிய இடங்களுடன் தொடர்புகளைப் பேணியது மட்டுமன்றி நெடுந் தீவானது யாழ்ப்பாணம், வன்னி, அனலைதீவு, வேலணை, நாரந் தனை, சரவணை ஆகியவற்றுடன் திருமணம், வர்த்தகம் மற்றும் இன்னோரன்ன தேவைகளுக்காகத் தொடர்புகளைப் பேணிக் கொள்ள வழிவகுத்தது.

இவ்வாறான உறவு நிலையின் ஆரம்ப புள்ளியாக அமைந் தவர் இந்நூலின் நினைவு நாயகன் அமரத்திரு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் குலமரபுத் தோன்றல்களான இரு மரபும் தூய, சைவ உயர்குடி, உழவர் குல முதலியார் பரம்பரை யின் முதன்மர் ஸ்ரீமத் தனிநாயக முதலி அவர்கள் ஆவர்.

தென்னிந்தியாவின் சோழ மண்டலம் செய்யூரின் சேனாதிப தியாக விளங்கிய தனிநாயகமுதலி அவர்கள் தமது சுற்றம், உறவு க்காரர் மற்றும் குடிமைகள் புடைசூழ பரிசு நிலமான நெடுந்தீவில் குடியேறி ஆட்சி அதிகாரம் செய்து கொண்டு வாழத்தலைப்பட்டனர் இந்நிகழ்வு யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் தமிழர் சனத்தொகை அடர்த்தியை அதிகரிக்கவும் தென் இந்தியாவில், சோழர், பாண்டி யர் முரண்பாட்டைத் தவிர்ப்பதற்காகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும்.

அவ்வாறே அனலைதீவிலும் தனிநாயக முதலியின் சகோதர முறையிலான கனகராய முதலியார் தனது பரிவாரத்துடன் குடியமர்த்தப்பட்டனர். இவ்விரு முதலிகள் பரம்பரையினர் காலகாலமாகத் தமது, உறவுகள், சொத்துக்கள் நிலைத்திருக்க தம்முள் திருமண மற்றும் வாழ்வியல் உறவுகளை முன்னெடுத்து வந்தனர். தற்போதும் இந்நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

அந்தவகையில் நெடுந்தீவும், அனலைதீவும் சைவத் தமிழைப் பேணிப்பாதுகாக்கும் புனிதப் பிரதேசங்களாகவும் பிள்ளையார், ஐயனாரின் அருளாசிகளுடன் ஆசார சீலர்களாகவும் வாழ்ந்து வருகையில் இவர்களது பண்பாட்டைச் சிதைக்கும் முகமாக ஐரோப்பிய காலனியாக்கச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம் பெறலாகின. இவற்றுடன் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் மதமாற்றம் மேலைத்தேய கலாசாரத் திணிப்பு, வர்த்தக செயற்பாடுகள், ஆட்சி அதிகாரம் என்பன முதன் முதலில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆக்கிரமித்ததன் ஊடாக நெடுந்தீவினை அதிகமாக பாதித்தது.

அனலைதீவு அளவில் சிறியதாகவும் அமைவிடத்தில் கேந்திர முக்கியத்துவமற்றதாகவும் காணப்பட்டதுடன் தனிச்சைவ சமயிகளின் தீவிரமான கடும் போக்கினால் கத்தோலிக்க கிறிஸ்தவ மதப் பரம்பல்களை தடுத்து நிறுத்த உதவியது. எனினும் நெடுந்தீவைக் கடல்வழி வர்த்தக மற்றும் பாதுகாப்பு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம் என்பதாலும், சனத் தொகை அடர்த்தி காரமாகவும் சமூக ஏற்றத்தாழ்வு காரணமாகவும் இலகுவாக மதமாற்றல் சாத்தியமாயிற்று.

இந்நிலையில் வடக்குக் கிழக்கிலும் தென்னிந்தியாவிலும் சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமிழ்ச் சீர்திருத்த கல்வி, சைவ சமயிகளுக்கான சைவநெறி, நவீன அறிவியல் கல்வி, ஆங்கிலக்கல்வி என்பவற்றை சைவவித்தியாவிருத்திச்

சங்கத்தின் ஊடாக அறிமுகம் செய்து வைத்தார். இவரது இந் நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தி பின்பற்றியதில் நாவலரது நண்பர்களும் மாணவர்களும் முதன்மை பெறுகின்றனர். அவ்வாறானவர்களுள் நெடுந்தீவு உடையார் (முதலி) வம்சத்தினர், அனலைதீவு உடையார் (முதலி), வம்சத்தினர் வேலணை உடையார் வம்சத்தினர் ஆகியோர் தீவகத்தில் சைவத்தமிழ் பாடசாலைகளை நிறுவிக் கல்விச்சேவை புரிந்தனர். அவ்வாறான பாடசாலைகளே நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் என்பன ஆகும். அதுமட்டுமன்றி இக்குலமரபினர் தத்தமது ஊர்களில் சைவாலயங்களைப் பரிபாலனஞ் செய்யும் பாரம்பரிய தலை முறையாகத் திகழ்ந்து தொண்டாற்றி வருகின்றனர்.

எனினும் மத சகிப்புத்தன்மைக்கு எடுத்துக்காட்டான நெடுந்தீவின் தனிநாயக முதலியின் வழித்தோன்றலில் உதித்த தெய்வத்திரு தனிநாயகமடிகளின் கிறிஸ்தவ மதப்பணிகளுடன் தமிழ் மொழிக்கான அதி உச்ச சேவையாக உலகத்தமிழர் பேரவையின் ஸ்தாபிதமும் தமிழராய்ச்சி மாநாடுகளின் தொடக்கமும் ஆகும். தனிநாயக அடிகளார் தமது குல மரபின் பெருமைகளை அறிந்திருந்ததால் தமிழுக்குச் சேவை செய்வதற்காகத் தமது குலப் பெயரை மீண்டும் நினைவுபடுத்தவே இப்பெயரை தமதாக்கிக் கொண்டார்.

இவ்வாறான குலமரபுச் சூழலை பின்னணியாகக் கொண்ட இந்நூலின் நாயகன் தமது உயர்குடிப் பண்பால் சமூகத்தில் நற்பிரஜையாக விளங்கி, சிறந்த குடும்பதலைவன், சிறந்த நாட்டுப் பற்றாளன் எனும் இரு நிலைகள் ஊடாகப் பயணித்து மனித குலத்திற்குச் சிறந்த உதாரண புருஷராக விளங்கினார். அவ்வாறானவரின் வாழ்க்கை வரலாற்றை அடுத்து நோக்குவோம்.

## அன்னாரின் வாழ்க்கைத் தடங்கள்

வரலாற்றுச் சிறப்பு மிக்க இலங்கைத்தீவின் மணிமுடியின் அணிகலன்களாக திகழும் தீவகத்தின் பெரும் நிலப்பரப்பான நெடுந்தீவின் மேற்கு 3ம் வட்டாரம் மண்டியம் பதியை பிறப்பிட மாகக் கொண்ட சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் இல்லற வாழ்வின் இனிய நற்குழந்தைகளாக நவரத்தினம், துரைச்சாமி, சௌந்தரம்மாள், சிவகாமிப்பிள்ளை, தையலம்மை ஆகியோருக்கு இளை யோனாகவும் சடேஸ்வரி எனும் பாசத்தங்கைக்கு தமை யனாராகவும் 28.01.1939 பிறந்தவரே அமரர் கணபதிப்பிள்ளை ஆவார்.

அமரர் கணபதிப்பிள்ளை தமது இளமைக்கல்வியை தமது ஊரின் சைவத்தமிழ்ப் பாடசாலையான நெடுந்தீவு சைவப்பிரகாசா வில் கற்றுக் கொண்டார். தனது 18 வயதில் கொழும்பு இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் பணிபுரியத் தொடங்கினார். இதன் மூலம் சிங்கள மொழியை சரளமாக பேசக் கற்றுக்கொண்ட போதி லும் 1958 இன் சிங்கள ஸ்ரீ கலவரத்தினை அடுத்துத் தமது வேலையை இழக்க நேரிட்டது. எனினும் மனம் தளராது தமது தந்தையாரின் இழப்பின் பின்னர் தமையனாருடன் இணைந்து வன்னியில் குடியேற்றத்திட்டப் பகுதியான ஸ்கந்தபுரத்தில் வேளாண்மை செய்து குடும்பப் பொறுப்பினை அதிகரித்துக் கொண் டார். மேலும் தமது அரசியல் ஈடுபாடு மற்றும் தென்னிந்தியாவில் அறிஞர் அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழக "திராவிட மறுமலர்ச்சிக் கொள்கை", ஈழத்தில் G.G.பொன்னம்பலத்தின் "ஒற் றுமைக்கான ஒத்துழைப்பு" என்ற அகில இலங்கை தமிழ் காங்கிர ஸின் "இணக்க அரசியல் கொள்கை" என்பவற்றில் நாட்டம் கொண்டு தமிழர் அரசியல் நலனிலும் அக்கறை காட்டினார். பின் தமிழ், (திராவிட) தேசியம் பற்றிய புரிதலை பெற்றதனால் தந்தை செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்து கொண்டு பெரும்பான்மை ஏகாதிபத்தியத் திற்கு எதிராக அஹிம்சா வழியில் போராடினார். இப்போராட்டத்தில்

ஈடுபட்ட இவரது சகாக்கள் இன்றும் தமிழரசுக் கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்களாக இருப்பது கண்கூடு.

தமிழரசுக்கட்சி சார்பில் செயற்பட்ட போது அவர்கள் ஆளும் வர்க்கத்தின் வன்முறைபாங்கான அடக்கு முறைக்கு மீண்டும் இலக்கானதுடன் அவர் அரசியலில் நின்றும் சற்று ஒதுங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இது 1976 இல் தமது இல்லற வாழ்விற்கான தேடலை ஆரம்பிக்க உதவியது. அந்த வகையில் தனது உறவுக் காரரான அனலைதீவு வேலுப்பிள்ளை - பத்தினிப் பிள்ளை தம்பதியரின் புதல்வியான சிவக்கொழுந்து (தேவி) என்பவரை கரம்பிடிக்க உதவியது. இவர்களது அன்பான இல்லறவாழ்வின் நற்பெறுபேறுகளாக சிறிமாறன், ஜெயசங்கர், மோகனா என்னும் மூன்று மக்கட் செல்வங்களை பெற்றெடுத்தனர்.

இந்நிலையில் அனலைதீவில் வாழத்தலைப்பட்ட திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான் ஆகிய பிரதேசங்களுக்கான கடல்வழி இணைப்பை "அலையரசி" படகுசேவையை ஆரம்பிக்க உதவியதுடன், பயணிகள் மானிய அடிப்படையில் பயணிக்க தக்கவாறு ஏற்பாடுகளை 1979ல் ஊரின் தலைவர்களுடன் இணைந்து பெற்றுக் கொடுத்தார்.

அனலைதீவு படகு சங்கம் ஊடாக "அலையரசி" படகு சேவையில் அர்ப்பணிப்புடன்பணிபுரிந்தார். அப்படகின் அய்வரி அறவிடுபவராக நீண்ட காலம் தொழில் புரிந்தார். இதனால் இவரது பெயருடன் "அலையரசி" என்ற நாமம் இணைந்து கொண்ட போதும், "அலையரசி" படகானது 1986 - 1987 களில் அரசியல் ஸ்திரமற்ற காலத்தே கடற்படையினரின் காரைநகர் தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் கடலில் மூழ்கி தனது வரலாற்றை முடித்துக் கொண்டது.

எனினும் அலையரசியின் இழப்பால் மனம் தளராத திருவாளர் கணபதிப்பிள்ளை அவர்கள் அனலைதீவில் விவசாய நட

வடிக்கையில் ஈடுபடலானார். இந்நிலையில் உக்கிரமான ஈழப் போரில் தீவகம் 1990 களில் கடற்படையினர் வசமான போது, யாழ்ப்பாணத்தினூடான அதன் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலை யானது, தீவகம் மீது பொருளாதாரத் தடையை உண்டு பண்ணி யது. இதனால் அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற தரைவழித் தொடர்பற்ற தீவுகளில் பஞ்சம் மேலோங்கவே அதற்குத் தீர்வுகான அனலைதீவில் மக்கள் கூட்டுறவுச் சங்கத் தினை ஸ்தாபித்து அதனூடாக திருகோணமலை, கொழும்பு ஆகிய வற்றிலிருந்து கப்பல் ஊடாக பொருட்களைத் தருவித்து பசிப் பிணியாற்றி உதவிகள் பல புரிந்தார்.

இது போன்றே ஊரின் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார தேவைக்களுக்காக அப்போது முதல் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி யின் செயலாளர் நாயகத்துடனும் பொறுப்பாளர்கள், கடற்படையி னர் எனபல தரப்பட்டவர்களுடன் சாணக்கிய அரசியல், சிங்கள மொழி வாண்மை காரணமாக தொடர்புகளைப் பேணி ஊருக்குச் சேவை செய்தார். அதற்காக அனலைதீவு வடக்கு கிராம அபிவிரு த்தி சங்கம் களம் கொடுத்திருந்தது. பொதுப்பணிக்கு ஆதரவாக அன்பு மனையாளின் செயற்பாடுகள் விருந்தோம்பல் முதல் மாதர் சங்கப் பணிகள் வரை பரவிக்கிடந்தன. இவ்வாறாகப் பொதுப்பணி யில் குடும்பமே இணைந்து பயணித்தாலும் தமது பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் கல்வி புகட்டி நற்பண்புகளை ஊட்டி வளர்த்து வந்தார்.

1992களில் தீவுப்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டத்திலிருந்து அதனூடாக அனலைதீவுக்கான நிவா ரணப் பொருட்கள் மற்றும் விவசாய உள்ளீட்டுப் பொருட்களை விநி யோகிக்க நடவடிக்கை எடுத்தார். எனினும் 1996ல் யாழ்ப்பாணம் இராணுவத்தினரால் மீட்கப்பட்ட பின்னர் பொருளாதார நிலைமை சுமுக நிலைக்குத் திரும்பியதால் தீவக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயலிழக்கும் தறுவாயில் இருந்தவேளை, தமது இணக்க அரசியல் செயற்பாட்டால் ஊர் பெரியோர்களுடன் இணைந்து அனலைதீவிற்கு நிரந்தரமான சங்கம் தொழிற்படவும் அதற்குத்

தனியே படகு லொறி ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்தும் உதவினார். தவிர அனலைதீவு வீதிகள் செப்பனிடல், மின்சார வசதி பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றிலும் மற்றும் ஆலயங்களின் வளர்ச்சிகளில் பங்கெடுத்தல் என அன்னாரது பணி பரந்து சென்றது. அவ்வாறு பொதுப்பணிகளில் தன்னை அர்ப்பணித்தாலும் உரிய காலத்தில் தமது சிரேஷ்ட புத்திரனான சிறிமாறன் அவர்களிற்கு அனலைதீவு தெற்கைச் சேர்ந்த குமரேசன் - லலிதாதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி சங்கீதா அவர்களை 2001ஆம் ஆண்டு இல்லற பந்தத்தில் இணைத்துக் கொடுத்து சுஹாஷினி, கலாஜினி, கௌசிகா எனும் பேரப்பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தார். மேலும் தமது இரண்டாவது மகனின் உயர்கல்வியை அடுத்து அவர் மக்கள் வங்கியில் பணியாற்றுவதைக் கண்டு மகிழ்வுற்றிருந்தார். தமது ஆசை மகள் மோகனா அவர்களின் உயர் கல்வி மற்றும் வசதிகள் கருதி 2002ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் குடி பெயர்ந்த இவர்களது இல்லற வாழ்க்கை நல்லறமாகத் தொடர, யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி தெய்வீக சூழலை வழங்கியது.

இவரது வாழ்விடம் யாழ்ப்பாணமாக இருந்த போதும் இவரது எண்ண அலைகள் இவரது கடந்த கால நெடுந்தீவு, கொழும்பு, வன்னி, அனலைதீவு என சுழன்று கொண்டிருக்கும். அந்தவகையில் அனைத்து மக்களுடனும் புன்முறுவலுடன் உறவு கொண்டாடும் இவர் பல்வேறு இன்னல்களிற்கும் முகம் கொடுத்து தமது பிறந்த, வாழ்ந்த, ஊரார், சுற்றம், உறவினர், நண்பர்கள் என அனைவருக்கும் தம்மாலான உதவி ஒத்தாசைகள் மூலம் சேவை செய்து வந்தார்.

2007இல் தமது மகளுக்கு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைசிங்கம், நாகேஸ்வரி தம்பதிகளின் ஏகப்புதல்வன் துசீந்தனை நல்லறமாம் இல்லறத்தில் இணைத்து மகிழ்ந்தார். இருந்தும் நாட்டின் அமைதி சூழல் குழம்பிய நிலையில் தமது மூத்த புதல்வன் சிறிமாறன் அவர்கள் வன்னியில் தொழில் நிமித்தம் வாழ்ந்த போது 17.02.2008 அன்று அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரில் மூழ்கினார். அமரர் சிறிமாறன் அவர்களின் இழப்பு இவர்களது குடும்பத்தார் ஈடுசெய்ய முடியாத சோகவரலாற்றை தந்து

விட்ட போதும் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது குடும்ப வாழ்வு மற்றும் பொது வாழ்க்கை என்பவற்றை எதுவித குறைகள் இன்றிச் சிறப்பாக செய்ய விழைந்தார்.

மீண்டும் அனலைதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைப் பதவியை பொறுப்பேற்ற அவர்கள் அதற்கான இரண்டு தள நிரந்தர கட்டிடத் தொகுதி ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுக்க ஆர்வமாய்ச் செயற்பட்டார். தமது முதுமையிலும் இளமையாக தொழிற்பட்ட அன்னாரின் உயரிய மெல்லிய உடல்வாகு, நோய்கள் எதையும் வெளியில் காட்டாத போதும் தமது உறவுக்காரரை பிரான்ஸ்சுக்கு பயணம் அனுப்புவதற்காக கொழும்பு நோக்கிப் பயணித்தார். அதன்போது ஏற்பட்ட சாதாரண காய்ச்சல் எனக் கருதிய நோய் அறிகுறி போதும் "சாட்டு" ஆக அவரது வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளியை வைத்தது. றோயல் தனியார் வைத்திய சாலை, களுபோவில அரசினர் போதனா வைத்தியசாலை என்பவற்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை அவர்களின் இன்னுயிரை பாதுகாக்க முடியாத நிலையே ஏற்படுத்தியது.

தமது அந்திம காலத்தில் பல தடவைகள் இந்தியா சென்றும் ஈழத்தின் பிரபல தலங்களுக்கும் தல யாத்திரைகள் சென்றும் புண்ணிய பலன்களைப் பெற்ற அன்னார் தமது வாழ்வின் இறுதியை படுக்கையில் நீண்டகாலம் கழிக்காமல், யாருமே எதிர் பாராத சூழலில் 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு 9.20 மணியளவில் நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையாரினதும், அனலை தீவு ஐயனாரினதும், வண்ணை வெங்கடேசப் பெருமானினதும் நினைவுகளுடன் காசிவிசாலாட்சி அம்பிகா சமேத காசி விஸ்வலிங் கேஸ்வரர் புண்ணிய அருளால் புளியந்தீவு ஸ்ரீ நாக ராஜேஸ்வரி அம்பிகா சமேத ஸ்ரீ நாகேஸ்வரன் திருவடி நிலையை எய்தினார்.

அன்னாரின் இலட்சிய வாழ்க்கை நிச்சயம் அவருக்குச் சுவர்க்க வாழ்வினை வழங்கும் என உறுதி கூறி அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதே அவருக்கு நாம் செய்யும் உபகாரம் ஆகும்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

## எத்தனை உறவாய் நீங்கள் எங்களுடன் ...

அன்பெனும் வலைவீசி அனைவரையும்
அணைக்கின்ற பண்பு நிறை உருவம் - பல்
ஊர்போற்ற வாழ்ந்த சமூகசேவகன்
துன்பமோ துயரமோ எதுவரினும் - அவர்
இடர்களைந்து இன்பமாய் வாழவைத்த இன்முகத்தோன்
கண்களில் கருணை ஒளி
காட்சியில் எளிமை
புண்படாப் பேச்சுரைக்கும் புகழாளன்
தன்னலம் கருதா "கூட்டுறவே நாட்டுயர்வு" எனும்
கொள்கை தனைச் சிரமேற்று
ஊன் உறக்கமின்றி உழைத்த உத்தமர்
ஆசைமிகு தம்பியாய்
அருமை மைத்துனனாய்
பாசம் தனைப் பொழியும்
சிறிய தந்தையாய் மாமனாய்
அன்பு நிறைந்த தாத்தாவாய்
ஆசைக் கதைசொல்லும் பூட்டனாய்
எத்தனை உறவாய் நீங்கள் இருந்த
நிஜமெல்லாம் நித்தம் எம் கண்முன்
நிழலாடுகின்றது இன்று அத்தனை உறவும்
அனலிடைப் புழுப்போல் உமை நினைத்து
கத்திக் கதறுகின்றோம்
கவலை தீர்க்க நீர் வருக
இப்புவி அவதரித்தோர் - என்றோ
ஓர் நாள் நித்திய வாழ்வு பெறுவது நியதி - இது
புதுவித்தையல்ல வாழ்விற் கண்ட சத்தியம் - ஆதலால்
எங்கள் உத்தமர் ஆன்மா உயர்நிலை அடைய
நித்தம் பிரார்த்திப்போம்
நிர்மலனை

**அண்ணன், அண்ணி,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**



இறுதிக்காலத்தில் அகிலன்



அன்னாரது இளமைத் தோற்றம்



தந்தையும் தனையனும்



அன்னாரது பொதுப்பணி சேவையில்



ஆன்மீக வாழ்வில் .....
(இராமேஸ்வர தீர்த்தம்)

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
### அவர்களுக்கான இரங்கல் பா

நீலக்கடலுடுத்து நித்தமுமே புன்னகைக்கும் கோலக் குடியிருப்பாம் அம்பூரின் சாலச் சிறந்த பெருமகனாய் எங்களுக்கு ஏலும் வரை பணிகள் செய்தவமான கொண்டாட்டம் யாவிலுமே ஓயாப்பணி புரிந்த உத்தமனே ஆலயங்கள் யாவும் விழாக்கள் சிறப்புற நடாத்தி குடும்பத்துடன் ஐயனின் விழாக்களை சிறப்பாக செய்து மகரஜோதி கண்டு கழித்த ஒரு பெருமகன் இன்று எங்களை விட்டு இறைவனடி சேர்ந்தார்.

**மூத்த குருசாமி**
**கண்ணன் ஐயா குடும்பத்தினர்**
**ஐயப்பன் கோவில்**
**கோண்டாவில்.**

### அண்ணாவிற்காக அன்னாரின் கவிதை . . .

இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா!
அஃதே உன் கால் மலரில், வைப்பேன் அண்ணா
அண்ணா அறிஞர் அண்ணா, நீர் வாழ்க
கடல் கடந்த தமிழர் வாழ்க திராவிடநாடு

சி.கணபதிப்பிள்ளை
132, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

உ

# "அலையரசி" கணபதிப்பிள்ளை

## அவர்களின் களப்பணி

ஆறரை அடி உயரம் .... ஆனால் சிறியன சிந்தியாத அருங்குணம்;

மெலிந்த தோற்றம் ..... ஆனால் நேரங்காலம் பாராது உதவும் பண்பு;

மெல்லென அரும்பும் சிரிப்பு ... ஆனால் வாழ்க்கையின் துயரங்களை அதன்பின்னே மறைத்திடும் நுட்பம்

மெதுவாக ஒலிக்கும் குரல் ... ஆனால் மென்மைக்குள் அடங்கிடாத ஆணித்தரமான கருத்துகள்

ஆம்.. அலையரசி கணபதிப்பிள்ளை என்று தீவகத் தொடர்புடையோர் அன்புடன் அழைக்கும் அமரர் கணபதிப்பிள்ளையின் ஆளுமைகள் பற்றி இவை போல் மேலும் கூறலாம்.

ஒவ்வொருவரும் சொந்த வாழ்வுக்குத் தேவைப்படும் பொருளாதாரத்தைத் தேடுவதற்கான முனைப்பிலே, பொது வாழ்வுக்கான நேரத்தை உழைப்பை - வழங்க முடியாதிருப்பது உண்மை. ஆனால் பொதுவாழ்வில் ஈடுபட்டுத் தன் நேரத்தையும் உழைப்பையும் செலவிடும் மனம் ஒரு சிலருக்குத் தான் வாய்க்கும். அவ்வாறான மனத்தைப் படைத்ததால் தானோ என்னவோ பொதுமக்களுக்கான சேவைகளை ஆற்றும் துறைகளில் தான் அமரர் கணதிப்பிள்ளையின் வாழ்நாள் கழிந்ததெனலாம்.

நெடுந்தீவிலே பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, திருமணத் தொடர்பு காரணமாக அவர் அனலைதீவில் வசிக்க நேர்ந்த காலப்பகுதியும், அனலைதீவு அபிவிருத்தி பணிகளில் அக்கறை கொண்ட எம்மில் பலர் ஒன்றிணைந்து பாடுபட்ட காலப்பகுதியும் ஒன்றாக அமைந்தது. அனலைதீவின் அபிவிருத்திக்கான ஒரு முன்மொழிவை 1978-79 களில் தயாரித்து பிரதானமாகத் தீவின் முன்னேற்றத்துக்கு சீரான படகுப் போக்குவரத்துச் சீரமைப்பே முன்னுரிமைப் பணியென்ற கருத்தின் அடிப்படையில் அனலைதீவு பிரயாணிகள் சங்கம் என்ற அமைப்பை திரு.வை.சாம்பசிவம் (s.m) அவர்கள்

தலைமைதாங்கி முன்னெடுத்த தருணத்தில், அவருடன் தோளோடு தோளாக நின்று உதவத் தொடங்கிய அமரர் கணபதிப் பிள்ளை அவர்கள் படகுச்சேவை நேரமுறைப்படுத்தும் பணியில் துணை நின்றார். அக்கால ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் களாக இருந்த, திரு.சண்முகசுந்தரம், திரு.சடாட்சர சண்முகதாஸ் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் மூலம் அக்கால யாழ் அரசாங்க அதிபராக இருந்த திரு.யோகேந் திரா் துரைசுவாமி அவர்களைச் சந்தித்து, நெடுந்தீவு அரச படகுச் சேவைபோல் அனலைதீவு - எழுவைதீவு - நயினாதீவு மக்களுக் கும் அரச படகுச் சேவையின் அவசியம் பற்றி எடுத்துரைத்தார். ஊர்காவற்றுறை தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் திரு.கா.பொ.இரத்தினம் அவர்களையும் பல தடவைகள் சந்தித்து எமது மக்களின் பிரச்சனைகளை மகஜர் மூலம் எடுத்து ரைத்தார்.

இவ் அடிப்படையில் அப்பொழுது நெடுந்தீவுப் படகுச் சேவையில் ஈடுபட்டுப் பழுதடைந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "அலையரசி" படகு திருத்தப்பெற்று 28.12.1979 முதல் ஊர்காவற் றுறை - எழுவைதீவு - அனலைதீவு - நயினாதீவு சேவை மார்க்கத் தில் சேவையாற்றத் தொடங்கியது. 50 சதம் படகுக் கட்டணம், தனியார் கட்டணம், தனியார் படகில் 5/- கட்டணம் அரச படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக, வெளியூரிலிருந்து எம் மூர்ப் பாடசாலைகளுக்கு அதிகாரிகள், ஆசிரியர்கள், மற்றும் பொதுமக்கள் வந்து செல்வது இலகுவாக்கப்பட்டது பொருளாதார ரீதியில் சிக்கன நிலை ஏற்படுத்தப்பட்டது.

திரு.கணபதிப்பிள்ளை இச் சேவையை ஏற்படுத்தப் பாடு பட்டதுடன் நில்லாது இப்படகில் கட்டணவசூலிப்பாளராகவும் பணி யாற்றினார். 1986-87ல் அலையரசி சேவை நாட்டுக் குழப்ப நிலைகள் காரணமாக நிறுத்தப்பட்ட, ஏதோ காரணங்களால் கண் ணில் இருந்து மறைந்து போனாலும் அதில் பணியாற்றிய திரு.கண பதிப்பிள்ளையினதும், தண்டேல் கந்தையாவினதும் அடைமொழி யாக அன்றும் என்றும் நிலைபெற்றுவிட்டது.

இதன்பின், கணபதிப்பிள்ளை அவர்கள் விவசாய நடவடிக் கைகளில் ஈடுபட்டு புகையிலை, மிளகாய், வெங்காயம் உற் பத்தியில் கவனஞ் செலுத்தினார். தீவிரப்பட்டுப் போன யுத்த நிலை களால் செலவீனங்கள் அதிகரித்த அளவு வருமானம் தரவல்ல துறையாக விவசாயம் அமையாத நிலை 1990 வரை நிலவியது. 1990ல் தீவகப்பகுதி அரசினால் மீட்கப்பட்ட பிரதேசமாக மாறியது. நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்கள் முழுமை யாகவும், ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு மக்களால் இடம்பெயர்ந்தவர் தவிர குறிப்பிட்ட தொகையினரும் இக்கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்குள் அகப்பட்டனர். மூன்று மாதங்களாக நிலவிய கடும் உணவுப் பஞ்சநிலைகளையடுத்து, பகுதி பகுதி யாக நிலை சீரடைந்தது.

1991ம் ஆண்டில் அனலைதீவு மக்கள் கூட்டுறவுச் சங்கம் என்னும் கூட்டு நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்பட்டபோது, அமரர் கணபதிப்பிள்ளை ஏனைய அங்கத்தவர்களுடன் கொழும்பு, திருமலை ஆகிய இடங்களிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள் போன்றவற்றைக் கொண்டு வந்து மகத்தான சேவைகளை ஆற்றினார். உறக்கமற்ற நிலை, உணவு கிடைக்காமை போன்ற சிரமநிலைகள் இருந்த போதிலும் அர்ப்பணித்து மிக்க சேவையில் முனைப்பாகச் செயற்பட்டு ஏனையோருக்கு முன்மாதிரியாக விளங்கினார். தபால் தொடர்பு, தொலைபேசித் தொடர்பு என்பன இல்லாத அக்கால கட்டத்தில் தொடர்பூடமாக கணபதிப்பிள்ளையவர்கள் விளங்கி னார். இவரால் பலர் பயன்பெற்றார்கள். ஆனால் இச்சேவைகளால் இறுதியில் பல தொல்லைகளைச் சந்தித்தார் என்பதும் உண்மை.

இரு மகன்மார், ஒரு மகள் என மூவரின் வளர்பருவத்தில், இவர் மாதக் கணக்கில் கொழும்பு, திருமலையெனச் சென்று விடுவார். இவரது பாரியார் சிவக்கொழுந்து அவர்களும் இவரை யொத்த குணநலன்கொண்ட பெண்மணி. இறைபக்தி மிக்கவர். பொறுப்புடன் குடம்பத்தைப் பார்த்துக் கொண்டவர். அதே சமயம் கணவருடைய சமூக சேவை, கல்விச் சேவைகளில் தாமும் பெரும்

பங்களிப்புச் செய்தவராவார். அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக விளங்கிய திரு.கணபதிப்பிள்ளை ஆற்றிய அபிவிருத்திப் பணிகள் பல. அதேசமயம் மாதர் சங்கத்தின் தலைவியாக திருமதி சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை தையல் வகுப்பு, மனையியற் பயிற்சி போன்றவற்றை ஒழுங்குபடுத்தினார். வெளியூரிலிருந்து கிராமத்துக்கு பணி காரணமாக வருவோருக்கு உண்டி வழங்கும் பெரும் பொறுப்பை இருவரும் பலதடவைகள் சிறப்பாகச் செய்துள்ளனர். சுவை மிகுந்த அவ் உணவு வகைகளும் பரிமாறும் பண்பும் காரியசித்திக்கான உபாயமாக அமைந்தன. வந்தவர்களுக்கு உணவளித்து மகிழும் இப் பண்புடையோரை எவரும் இலகுவில் மறந்து விடமாட்டார்கள்.

1992ல் மேலதிக அராங்க அதிபர் பணிமனை தீவகத்தில் இயங்கி, பல சேவைகளை மீள உருவாக்கி மக்களுக்கான வசதிகளை வழங்கி வந்தது. அவ்வடிப்படையில் 1992 தீவுப்பகுதி ப.நோ.கூ சங்கம் உருவாக்கப்பட்டு உணவுப் பொருள், நிவாரணம், விவசாய இடுபொருட்களின் விநியோகத்தை மேற்கொண்டது. 1996ல் திரும்பவும் யாழ்மாவட்டம் முற்றாக இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் வந்தவகையில் தீவகத்துக்கான தரைவழித் தொடர்பு மீண்டும் கிடைத்தது. இடம்பெயர்ந்த மக்களும், மக்கள் நிறுவனங்களும் சொந்த இடங்களுக்கு வந்தன. அதனால் தீவுப்பகுதி ப.நோ.கூ சங்கப் பணிகள் முடக்கப்படும் நிலை ஏற்பட்டது. அச் சமயத்தில் மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் ஆகியோருக்கு சங்க அங்கத்தவர்களும் பொதுமக்களும் விடுத்த கோரிக்கைக்கு அமைய அனலைதீவில் இச் சங்கம் இயங்க அனுமதிக்கப்பட்டது. இச்சங்கம் அனலைதீவுக்குக் கிடைக்க அமரர் கணதிப்பிள்ளை பெரும் பங்கு வகித்தார். சங்கத்துக்குரிய லொறி, படகு என்பன கிடைக்கப் பெறவும் உபதலைவராக இருந்து பாடுபட்டார்.

கடந்த 15 ஆண்டுகளாக இச்சங்கத்தின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயற்பட்டார். நிரந்தரக் கட்டிடம் ஏற்படுத்தவும், களஞ்சிய வசதி உருவாக்கவும் உரிய செயற்றிட்

டங்களை கொண்டிருந்தார். மீண்டும் கடந்த ஆண்டிலிருந்து தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு கூட்டறவு சங்க நெறிமுறைகளை அனுசரித்துச் சங்கத்தை வளர்க்கப் பாடுபட்டு வந்தார். எதிர்பாராத வகையில் வருத்தங் காரணமாக மீளாத்துயரில் எமை ஆழ்த்திப் பிரிந்து விட்டார்.

யாவருடனும் இணைந்து பணியாற்றும் இளகிய இதயம், உதவிடும் மனப்பாண்மை, பின் தங்கிய கிராமப் பின்புலத்திலிருந்து வந்தமையால் இயல்பாகவே மேம்பாடுகாண விழையும் இயல்பூக்கம், கிடைத்த வாய்ப்புக்களினூடாக எதையும் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம், விடாமுயற்சி என்பன இவரது வாழ்க்கைப் பாதையில் நாம் காணும் செய்திகளாகும்.

எண்ணத்தால்; இயல்பால் எடுத்துக் காட்டானாய்
திண்ணத்தால்; திறனால் திடம் ஊட்டினாய்
விண்ணகத்தே விளங்கு விடிவெள்ளி யாகவே
முன்னின்றே "அலையரசி" முறையொளிர்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**அனலைதீவு க.சௌந்தராஜன் ஐயர்**

RAVI KARUNANAYAKE F.C.M.A

MEMBER OF PARLIAMENT - UNITED NATIONAL PARTY
ORGANISER - SRI JAYAWARDANAPURA KOTTE
CHAIRMAN - COLOMBO DISTRICT
SECRETARY - INTERNATIONAL RELATIONS

திருமதி சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை
இல 11, வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

## இரங்கல்செய்தி

அன்புடையீர்!

உங்கள் குடும்பத் தலைவர் திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவில் உறக்கமின்றி வாடும் உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கும் அதேவேளையில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் நான் பிரார்த்திக்கின்றேன்.

**ரவி கருணாநாயக்க**
பாராளுமன்ற உறுப்பினர் / கட்சித் தலைவர்
கொழும்பு மாவட்டம்

## முன்வந்து உதவும் மூத்த குடிமகன்

உள்ளந்தனையது உயர்வு என்கிறது திருக்குறள்.

எங்கள் தோழமைமிக்க அமரர் கணபதிப்பிள்ளை அவர்களும் உள்ளத்தால் ஒப்புவமையற்று மிகவுயர்ந்து நின்றாார் இன்றும் நிற்கின்றார்.

பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் பற்பல சமய சமூக நிறுவனங்களை நிர்வகித்து அனைவரும் விரும்பும் அன்புள்ள கணபதிப்பிள்ளையாக வலம் வந்தார். தன் நகைச்சுவை பேச்சினால் இளைஞர், முதியோர், தன் வயதினர் என்ற பேதமின்றி ஒரு திறத்தினராய் அனைவரையும் மகிழ வைத்த நண்பன்.

தான் சார்ந்த சமூகத்தின் நண்பர்களின் உறவினர்களின் துயரங்களின் போது முன்வந்து உதவி துயர் தீர்க்கப்பாடுபட்ட மூத்த குடிமகன். தந்தையைப் போன்று வழி நடத்தவும் தோழனைப் போன்று தோள் கொடுக்கவும் சிந்தை மகிழச் சிரிக்க வைக்கவும் எங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய உறவு அவர்.

அலையரசி என்னும் அடைமொழியோடு எம்மிடையே வலம் வந்த ஒரு பல்கலைக்கழகம் இன்று எம்முடன் இல்லை.

அவருடைய சிந்தனையும் செயலும் எங்கள் வசம் என்றும் இருக்கும் பசுமையான நினைவுகளாக, அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"மரணம் வாழ்வின் முடிவல்ல"

**சில்வெஸ்திரி அலெக்ஸாண்டர் (பா.உ)**
**(உதயன்)**
**ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி**

## உயர்திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்படும் இரங்கல் செய்தி

அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்தேன்.

கடந்த 17 வருடங்கட்கு மேலாக தீவக பகுதிகளில் எங்களோடு பழகி பல்வேறு பொது வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு கூட்டுறவுத்துறையிலும் ஏனைய பொது விடயங்களிலும் தன்னை ஈடுபடுத்தி தன்னலமற்ற சேவைக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து திடீர் என மரணமடைந்து எனக்கு மட்டுமல்ல இவரை தெரிந்த அனைவருக்கும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த துக்கத்தையும் கொடுத் திருக்கும் என்பதை நான் உணர்கின்றேன். ஆரம்பத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையிலும். பின்பு தீவக அரச படகுச் சேவை யிலும் கடமையாற்றியதனால் தீவக மக்கள் அனைவருக்கும் இவரையும் தெரியும் அதேபோல் இவருக்கு தெரியாத தீவக மக்கள் இல்லை என்றே சொல்லலாம்.

1990ம் ஆண்டு தீவக பிரதேச அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட காலத்தில் தீவக மக்கள் பாரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கினார்கள். உணவுப் பொருட்களை கப் பல்கள் மூலம் திருகோணமலை மற்றும் கொழும்பில் இருந்து நேரடியாக தருவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலத் தில் தன்னை முழுமையாக அதில் ஈடுபடுத்தி இருந்ததை காணக் கூடியதாக விருந்தது.

குடியியல் நிர்வாகம் சீர்குலைந்து மக்கள் துன்பப்பட்ட அக் காலத்தில் உதவி அரசாங்க அதிபராக ஊர்காவற்றுறை பிரதேசத் தில் பொறுப்பேற்ற போது அப்பிரதேசத்தின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை மீள உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பி லிருந்தது இதற்கு அப்பிரதேசங்களில் உள்ள மூத்த பிரஜைகளின்

ஆதரவும் ஆலோசனையும் நிறையவே தேவைப்பட்டது. அக் காலத்தில் அனலைதீவுப் பகுதியில் பல மூத்த பிரஜைகள் பொது வாழ்வில் ஈடுபட்டு அனுபவம் வாய்ந்தவர்களாக காணப்பட்டார்கள் அந்தவகையில் அமரர் சின்னதம்பி கணபதிப்பிள்ளை அவர்களும் முக்கியமானவராக காணப்பட்டதினால் அவரோடு பழகும் சந்தர்ப் பம் கிடைத்தது. அன்றிலிருந்து இறக்கும் வரை அவரின் நட்பு மிகவும் காத்திரமானதாகும். பொது விடயங்களை விவாதிப்பதி லும், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உரியவர்கட்கு தெரியப்படுத்தி தீர்வை பெற்றுக் கொடுப்பதிலும் மிகவும் ஈடு பாட்டுடன் செயல்பட்டு வந்தார்.

தீவக ப.நோ.கூ சங்கம் செயற்பட முடியாது என்ற நிலை வந்தபோது அதை அனலைதீவு சங்கமாக மாற்றத் தாருங்கள் அனலைதீவிலே இயங்குவோம் என்று இவரும் இவரோடு இணைந்த அனலைதீவு பிரமுகர்களும் கேட்டதற்கிணங்கவே அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் சிறப்பாக இயங்குகிறது. இதில் இரண்டு தடவை தலைவராக இருந்து சங்க வளர்ச்சிக்கும் அதனூ டாக மக்கள் சேவைக்கும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும்.

இவரின் பிரிவால் துயருறும் அனைவருடனும் துயரத்தை பகிர்ந்து கொள்கின்றேன்.

**ஜே.எஸ்.செல்வநாயகம்**
**உதவி செயலாளர்**

**வடமாகாண ஆளுனர் செயலகம்**
**யாழ்ப்பாணம்**
**21.03.2011**

உ

# ஈரவிழிகளில் இதயஅஞ்சலி

நேற்றுவரை மாமா உறவுசொல்லி அன்பு காட்டிய ஒரு உருவம் இன்று இல்லை. உறவுகள் மறக்கும் உருவம் அல்ல. மாமா நினைவுகூற ஒரு மலர் வேண்டும் என்றார்கள் கவலையில் கண்ணீர் சொரிகிறது பார்வையில் ஒரு மங்கல் நெஞ்சம் கனக் கிறது எழுதச் சொல்லிவிட்டார்கள் எழுதுகின்றேன்.

மாமாபற்றி நிறையச் சொல்லலாம். எழுதலாம் ஏனென்றால் அவர் சொரிந்த அன்பு அதிகம் இழந்து விட்டோம். இதயம் கணக்கின்றது அப்படி ஒரு தங்கமான மாமா.

கொழும்பு மாமா என்று செல்லமாக அழைக்கின்ற காலம் என் நினைவை நெருடுகின்றது. கொழும்பு துறைமுகத்தில் வேலை பார்த்தகாலம் கொழும்பிலிருந்து மாமா வந்துவிட்டால் (எனது அம்மா) தங்கம்மா அக்காளுக்கும் ஒரு பார்சல் வரும் அப்படி ஒரு கூட்டுக் குடும்பம் நாங்கள் மாம வந்து விட்டால் மண்டி ஆச்சியிடம் அம்மாவுக்கும் தெரியாமல் ஓடிவிடுவோம். ஏனெனில் மண்டி ஆச்சி யின் உபசரிப்பு. அதுவும் சாப்பிடாம் விடவும் மாட்டார். இந்த இடத்தில் இல்லிப்போல குஞ்சியம்மா, செல்லம் அன்ரி ஆகி யோரின் அன்பு பிணைப்பு நிழலாடுகின்றது. மாமவின் கொழும்புச் சொக்கிளேற்றைச் சுவைத்து மாமாவுடன் கொஞ்சிக் குலாவிய நினைவுகள் நெஞ்சை நெருடுகின்றது.

மற்றொன்று மாமாவின் தமிழ் பற்று அவர் அறிஞர் அண்ணாவிலும் மற்றும் தி.மு.க மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். அண்ணாவின் புத்தகங்கள் நிறைய வாசிப்பார். அது மட்டு மல்லாமல் அவற்றை எங்களுக்கும் கொடுத்த எங்களை வாசிக்கச் சொல்வார். அப்படி அந்தப் புத்தகங்களை வாசித்தாலேயே நான் இன்று மேடைகளில் பேசுகின்ற ஆற்றலைப் பெற்றேன் என்றால் மாமாவின் வழிகாட்டலினாலே தான்.

எப்பொழுதும் சிரித்தமுகம் கொஞ்சலான மொழி குறும்பு கலந்த பேச்சு மற்றவரை நோகச் சொல்லாத பண்பு, எதிரியையும் நண்பனாகக் கருதும் நல்ல மனசு.

இப்படி அவருடைய குண இயல்புகளை அடுக்கிச் செல்ல லாம் அவரிடத்தில் காணப்பட்ட மற்றுமொரு சிறப்பம்சம் பசுத் தீவினிற்கே உரிய (நெடுந்தீவு) விருந்தோம்பல் பண்பு. மாமாவின் கணம் அறிந்து வள்ளுவனுக்கு வாய்த்த வாசுகி போல அமைந்த மாமி. அவர்கள் இருவரும் பெற்றெடுத்த மூன்று முத்துக்கள். ஒரு முத்து ஆண்டவன் சேவைக்கு ஆளாகிவிட்ட போதும் இருவரையும் வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்து மகிழ்ந்தார்கள். நல்லதோர் மருமகளைத் தேடி இணைத்துக் கொண்டார்கள். அவர் மரு மகனைத் தேடி இணைத்துக் கொண்டார்கள். அவர் மருமகனல்ல மகன். குடும்பப் பொறுப்பை ஒப்படைத்த ஓய்வு எடுத்துச் சென்று விட்டார் மாமா. வாழ்க்கையில் மாமா, மாமி சந்தித்த துன்பங்கள் சொல்ல முடியாதவை. இருந்தும் துவண்டுபோகாமல் தன் உறவை யும் புகுந்த வீட்டு உறவையும் இரு கண்களாக மதித்து உறவில் எந்த விரிசலும் வராமல் கட்டிக் காத்த உத்தமர். உறவுகளின் நிகழ்வுகள் எங்கு நடந்தாலும் வெள்ளை வேட்டி வெள்ளை சேட்டுடன் ஓர் உயர்ந்த உருவம் அங்கு அமர்ந்திருக்கும் சமூகப் பணி ஆற்றுவார். விளம்பரம் தேடமாட்டார். யாருக்கும் தெரியாது ஆனால் அவரின் பிரிவுச் செய்தி கேட்டு திரண்ட மக்கள் கூட்டம் ஆற்றிய இரங்கல் செய்தி என்பனவே சான்றாகும்.

இவர் சுறுசுறுப்பாக வாழ்ந்ததோடு சுற்றத்தாரையும் அன்புடன் அரவணைத்து வாழ்ந்து வந்தார். இவரின் நற்பணிகள் பூலோகத்திற்குப் போதுமென்றெண்ணிய இறைவன் தேவலோக சேவைக்காக 2011.03.06 திகதி அன்று அன்பு மனைவி அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், சகோ தரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் கலங்கி நிற்கத் தன் னோடு இணைத்துக் கொண்டான். அன்பும் பாசமும் கொண்டு கட்டிய கயிறு அறுத்து விட்டது. எச்சங்கள் விடமாட்டார்கள். உறவு இறுக்கமானது அன்பான உயிர் போய்விட்டது. கவலை எல் லோருக்கும் மாமா எல்லோர் உள்ளங்களிலும் வாழ்கின்றார் என்பதில் ஓர் நின்மதி அடைகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**சு. நடராசலிங்கம்**
**(ஓய்வுபெற்ற அதிபர்)**
**குடும்பத்தினரும் சகோதரர்களும்**
**நெடுந்தீவு.**

# உன் நாமம் எம் வாழ்வில் என்றும் நிலைக்கும்!

"நெருநல் உளன், ஒருவன், இன்று இல்லை! என்னும்
பெருமை உடைத்து, இவ்வுலகு."
"அலையரசி" கணபதிப்பிள்ளை போய்விட்டாரா..?
நம்பமுடியவில்லை...

நினைவழியா சோகத்தின் காரிருளை என் மனதில் படியவைத்துவிட்டு, மைத்துனர் கணபதிப்பிள்ளை போய்விட்ட செய்தி, இடியாய்த்தான் என் செவியில் வந்திறங்கியது. கடந்த மாதம் தானே நாம் யாழ்ப்பாணத்திலிருந்து ஒன்றாகக் கொழும்புக் குப் பிரயாணம் செய்தோம். யான் பாரிஸ் வந்துவிட்டேன். அதற்குள் உனக்கென்ன விரைவுப் பயணம்...?

அனலைவாழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், அவலங்கள் அத்தனையையும் அறிந்தவன் நீ... அந்தப் பாமர மக்களின் தேவைகள் அறிந்து ஓடி ஓடி உதவியவன் நீ .. அந்தத் தீவிலிருந்து, யாழ் - கொழும்பு என்று மக்களின் தேவைகளை நிறைவேற்ற அலுக்காமல், சளைக்காமல் பயணித்தவன் நீ ....

"அலையரசி" நடத்துனனாக, அன்போடு பணியாற்றி அனை வரதும் உள்ளங்கவர்ந்தவன் நீ .. அதனால் தானோ "அலையரசி" என்ற நாமம் உன்னோடு அப்பிக்கொண்டது போலும்..! அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவனாக நீ, ஆற்றிய பணிகள் அம்மக்களின் மனங்களை விட்டு மறைந்துவிடுமா... என்ன..? நீ நினைத்திருந்தால் பட்டினத்து வாழ்க்கையில் சுகித் திருக்கலாம். ஆனால் உன் மனதில் நிறைந்த அனலை மண்ணை விட்டு அகலாது, மண்ணின் மைந்தனாக, மக்கள் தொண்டனாக வல்லவா வாழ்ந்தாய் ...!

வாழ்வின் சூக்குமம், நிலையாமை, விதிப்பயன் என்று எமக்கு நாமே என்னதான் சமாதானம் கூறிக்கொண்டாலும் சிலரது பிரிவுத்துயர் இவற்றையெல்லாம் தாண்டி எம்மை உள்ளத்தால் உருகிட வைத்துவிடுகிறதல்லவா? அப்போது தான் நாம் உண்மை மனிதனை உணர்ந்து கொள்கிறோம் - அடையாளம் காண்கிறோம். அத்தகைய மனிதன் - தொண்டன் தான் எம் கணபதிப்பிள்ளை என்பதில் எம்மக்கள் எவர்க்கும் இரு கருத்து இருக்கமுடியாது.

தொண்டனாய், தோழனாய், நண்பனாய், அறிவுரை கூற வல்லவனாய், அயராது ஓடி ஓடி ஊருக்கு உழைப்பவனாய், உறவையும் உரிமையையும் ஒன்றிணைத்துக் காத்தோனாய் வாழ்ந்த, உயரிய மானிட அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட மைத்துனர் கணபதிப்பிள்ளை நாமம் எம்மக்கள் மனதில் நீடித்து நிலைக்கும்...!

அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

"உறங்குவது போலும், சாக்காடு, உறங்கி
விழிப்பது போலும், பிறப்பு"

"கல்விச் சேவையாளர்"
**சி.காராளபிள்ளை** (முன்னாள் அதிபர்)
பிரான்ஸ்

# மக்கள் மதித்த பண்பாளன் (அலையரசி)

அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களை நான் அறிவறிந்த வயதிலேயே நன்கு தெரியும். இவர் பலவகையிலும் உறவுகளாய் இருந்த போதும் இறுதியில் மாமாவானார். இவர் தன்னுடைய மண்ணுலக வாழ்க்கையில் உற்றார் உறவினர்களை நேசிப்பதிலும் அரசியல், கூட்டுறவு போன்ற துறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் மட்டுமல்லாது நிர்வாக சேவையில் உள்ள உயர் அதிகார்கள் தொடக்கம் சிற்றூழியர் வரை மதிப்புக் குரியவராக வாழ்ந்து தன்னுடைய அறிவின் நிமித்தம் அன்போடும் பண்போடும் பழகிய ஒருவர் மிகச்சிறப்பாகச் சொல்லப் போனால் நீண்டகாலமாக "அலையரசி" எனும் படகில் தீவுகங்களுக்கு நடத்துனராக சேவையாற்றியவர் அத்துடன் நில்லாது "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கருத்துக்கிணங்க அனலைதீவு ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இறுதி மூச்சுவரை பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அத்துடன் எங்கு இன்ப துன்ப நிகழ்வுகள் நடைபெற்றாலும் அங்கெல்லாம் அவர் பிர சன்னமாய் இருப்பார். தனது வாழ்க்கையில் இழப்புக்களைச் சந்தித்த போதும் மனந்தளராது வாழ்க்கையை செவ்வனே நடத்தி யவர்.

இவரைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றை எழுதப்போனால் நீண்டு கொண்டே போகும்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஆறுதலடைய அவருடைய குலதெய்வத்தை வேண்டி அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த் திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**1ஆம் வட்டாரம்,**
**நெடுந்தீவு.**

பிரிவால் துயருறும்
**க.கோபாலபிள்ளை**
(முன்னாள் கணக்காளர் / பொது முகாமையாளர்)
நெ.ப.நோ.கூ. சங்கம்

வரைவுள்ள

# அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

*Analaitivu Multi Purpose Co- Operative Society Limited*

Regd No:J/TRI456 of26-02-1992

எமது எண் Our Ref } ..............

உமது எண் Your Ref } ..............

அனலைதீவு

Analaitivu

திகதி 20..................

---

நீங்கா நினைவுகளுடன் ....

மரணம் இயற்கையானது தான் ஆனாலும் சிலரது மரணம் அதிர்ச்சி தருவதாக அமைந்து விடுவதுண்டு. அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவும் என்னை அந்த நிலைக்கு ஆளாக்கியது. காரணம், யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்து இருந்த காலத்தில் எமது அயல்வீட்டில் வசித்தமையால் எமது பள்ளிப் பராயம் முதல் திரு.கணபதிப்பிள்ளை அவர்களுடன் நெருங்கிப் பழ கும் வாய்ப்பு கிடைத்தது. இறுதிக் காலக் கட்டத்தில் சங்கத்தின் முகாமைப்பொறுப்பை ஏற்று நடத்தும் வாய்ப்பு கிடைத்தமை யாலும் ஐயா அவர்களின் முழுமையான செயற்பாட்டைக் கண்டேன்.

இக்காலப்பகுதியில் இவரின் சமூகசேவை, இறைதொண்டு, மேலாக அவர் கூட்டறவுத் துறையில் காட்டிய ஈடுபாடும், அவரது அயராத உழைப்பும் என்னை வெகுவாக கவர்ந்திருந்தது. அனலைதீவு மக்களுக்கு தனியான ஒரு ப.நோ.கூ.சங்கம் ஒன்று இருந்தால் தான், குறித்த பகுதி மக்கள் தமது தேவைகளை குறித்த நேரத்தில் நிறைவேற்ற அவரது அயராத உழைப்பால் அனலைதீவுக்கு ஒரு வரப்பிரசாதமாக ப.நோ.கூ.சங்கம் உரு வாவதற்கு காரணமாக இருந்த ஒரு பெருந்தகை என்பது மிகை யாகாது. மேலும் சொல்வதானால் இவரிடம் அனைத்து ஒருங்கே அமைந்திருந்தது.

சிறந்த முகாமைத்துவம்
தெளிந்த மதிநுட்பம்
அரசியல் சாணக்கியம்
ஆளுமைத்திறன்

பகைமுகம் கொண்டுவரும் மாந்தர் நெஞ்சை நகைமுகம் கொள்ளச் செய்யும் பாங்கு அவரக்கு கைவந்த கலை.

அவர் தொழில் காட்டும் சிரத்தை எம் வேலையில் காணும் நேர்த்தி,
கண்டிப்புடன் கூடிய பண்பு பின்பு
இதமான கதைகள்
செயலாற்றும் திறன் ஓர்
தந்தையின் சிந்தையை
தன்னகத்தே கொண்டவர்
இத்தனையும் மடிந்தனவா?

இந்த நிறை மாந்தரை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகு சென்றுவிட்ட அமரரே நாங்கள் சிரம் தாழ்த்தி உமக்கு அஞ்சலி செய்கின்றோம்.

ஐயாவின் இறுதி ஆசை, சங்கத்திற்கு ஒரு தலைமைக் காரியாலய கட்டிடம், புதிய படகு ஒன்று அவையும் நிறைவேற நாம் அயராது உழைப்போம். தங்கள் அபிலாசையை நிறைவேற்ற அனலைதீவு மக்களும் பூரண ஆதரவாக இருப்பார்கள்.

உம் ஒப்பற்ற மனையாள், மக்கள், மாதுவர் அனை வருக்கும் என் அனுதாபத்தை இதயக் கண்ணீர் ஊற்றாக அஞ்சலிக்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**க.பிரதீபன்**
பொது முகாமையாளர்
அனலைதீவு ப.நோ.கூ.சங்கம்

## மாசிலா அன்பு கொண்ட மனிதரை உம்மில் கண்டேன்

நெடுந்தீவு எமக்களித்த நேர் மகனார் அலையரசி
கணபதிப்பிள்ளை நாமம் காலத்தால் அழியாதையா!
பாடுபட்டுழைத்து நின்று பலர்வாழ வழி வகுத்து
நேசக் கரம் நீட்டும் நெடியவன் நீரன்றோ
ஓடும் அலையரசி ஓய்ந்து விட்ட போதினிலும்
நாடும் உன்நாமம் எம் நாவில் வாழுமையா
வீடு அழைத்து வந்து விருந்தளிக்கும் உம் உறவை
நாடு மறந்தாலும் நா மறக்க மாட்டாதையா!

மேவிய தலை இழுப்பும் மேன்மை கொண்ட புன்சிரிப்பும்
தூய வெள்ளாடை பூண்டு துலங்குவீர் எப்பொழுதும்
நாவினால் நயந்துரைத்து நாட்டிற்காய் உழைத்துநின்ற
மாபெரும் மனிதரன்றோ மனிதரில் தெய்வமன்றோ
நேரிய கொள்கை கொண்ட நெஞ்சத்தில் வஞ்சமற்ற
மாசிலா அன்பு கொண்ட மனிதரை உம்மில் கண்டேன்
தேசத்தில் வைத்த பாசம் தன் தேகத்தில் வைக்கவில்லை
மாயையால் வந்த உடல் மரணித்து விட்டதையா!

**வீ.ஓங்காரலிங்கம்**
அதிபர்
யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்

# நாட்டிற்கு உழைத்த நல்ல மனிதர்

அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் தாம் வாழ்ந்த அனலைதீவுப் பிரதேசத்திற்கு தன்னால் முடிந்த உதவி களை பல்வேறுபட்ட காலப்பகுதியில் துடிப்புடன் செயல்ப்பட்டு நிறை வேற்றி முடிந்த பெருமகனார், இவர் அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும். அனலைதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் நீண்டகாலம் பணியாற்றி இப்பிரதேசம் வாழ் மக்களின் தேவைகளை இனம் கண்டு தீர்த்துவைத்த உத்தமர் யாழ் பாதைகள் அடைபட்ட காலப்பகுதியில் உணவு இன்றி மக்கள் கஸ்ரப்படுவதை உணர்ந்த இவர் திருகோணமலை ஊடாக கப்பலில் சென்று கொழும்பில் இருந்து பொருட்களைக் கொண்டு வந்து தம் மக்களை காத்த கருணை நெஞ்சு படைத்தவர், செயல்த்திறனும், பேராற்றலும் படைத்த இவர் நோய்வாய்ப்பட்ட காலப்பகுதியில் கூட அனலைதீவு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவராக நின்று நெறிப்படுத்தி இருக்கின்றார். இவர் அலையரசி என்ற அடைமொழியுடன் அவர் பெயர் புகழ்பெற்று நின்றது அவர் எமக்கு கற்றுத் தந்த பாடம் எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பது பெரிதல்ல நாம் வாழ்ந்த நாட்களில் நாட்டிற்கு என்ன நன்மை செய்தோம் என்பது தான் பெரிது.

எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் சுபாபம் கொண்டவர். எத்தனை துயர்வரினும் வெளிக்காட்டாமாட்டார் புன் முறுவல் செய்து மற்றவர்களை மகிழ்விக்கும் பேராற்றல் கொண்டவர் இவரது திடீர் மறைவு எம்மைப் பேரதிர்ச்சிக்கு ஆளாக்கிய போதும் அவர் ஆற்றிய பணிகள் இன்றும் எம் மனங்களில் உயிர்பெற்று நிற் கின்றன. தேசப்பற்றுக் கொண்ட நல்ல மனிதரை இழந்து விட்டோம் மனம் தேறமுடியவில்லை. தேற்றுவாரும் இல்லை இவ்வாறான மனிதர் களை இப்பூமியில் காண்பதென்பது அரிது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிய அமரர் சின்னத்தம்பி கணபதிப் பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென அனலை தீவு ஹரிகர புத்திர ஐயனாரை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**கிராம அபிவிருத்திச் சங்கம்**
**அனலைதீவு வடக்கு J/37**
**அனலைதீவு.**

# என் அண்ணனின் நம்பமுடியாத மறைவு

தம்பி என்றால் அது அன்புக்கு இலக்கணம் கூறும் வார்த்தை என்பதை அவர் மூலம் தான் அறிந்தேன். அவரின் துயரச் செய்தி கேட்டதை என்னால் நம்பவே முடியவில்லை.

நீர்வளமும் நிலவளமும் அமையப்பெற்று ஆநிரையும் புரவிகளும் நிறைந்த நாடும் சைவமும் தமிழும் சார்ந்து மதகுரவர் கன்னியர்கள், ஆசிரியர், ஏர்பேணி ஊர்காக்கும் இனிய கமக்காரர் என்று பல தரப்புடைய அறிஞர்களையும் நிபுணர்களையும் தந்த தீவாம் நெடுந்தீவின் மேல் திசையில் நெழுவிணிப் பிள்ளையாரின் வடக்கு வீதியிலுள்ள மண்டியம்பதியில் பிறந்து அன்பாலும் பண்பாலும் அனைவரையும் கவர்ந்து மக்கள் பிரயாண சேவையில் நற்பணியாற்றி அதன் மூலம் "அலையரசி" எனும் செல்லப்பெயர் பெற்று விலாசமாய் வாழ்ந்து நெடுந்தீவும் அனலைதீவும் பரம்பரை உறவுகளைக் கொண்ட என்பதை உலகறிய செய்வதால் தம் சொந்தத்தில் திருமணம் செய்து பண்பான மக்களைப் பெற்று பெருமையாய் வாழ்ந்த அண்ணா உன் உயிரை ஏன் பிரித்தான் இயமதூதன்.

நீங்கள் தம்பி என்று சொல்லும் சொல் என் காதில் இன்னும் ஒலிக்குதண்ணா. நின் பிரிவால் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் நடைப்பிணம் போல் நடமாடும் உங்கள் குடும்பத் தாருக்கு ஆறுதல் சொல்லி அனுப்புமண்ணா மடலொன்றை.

உடன் பிறவா சகோதரன்

**சு. கோபாலசிங்கம்**

# அமைக சாந்தி

அன்பான பாச உள்ளம்
படைத்தவர் முதியோர் சேவையை
தன்னலம் கருதா தாற்றி
தரணியோர் போற்ற வாழ்ந்து
சாதனை புரிந்த எங்கள்
கணபதிப்பிள்ளை குஞ்சி வாழ்வில்
சோதனை எதுவும் இல்லை
வெற்றிமேல் வெற்றி கண்டார்.

கண்கண்ட தெய்வமாக நினைத்து
மதித்தவர் அனலை நங்கை
விண்திறல் சிவக்கொழுந்து துணையினோடு
பண்பான மக்கட் செல்வம்
அன்பான உற்றாரும் உறவினரும்
பூரித்துச் சுற்றம் சூழ
பேரின்பம் கண்டே சென்றார்
பெறுகவே சாந்தி! சாந்தி!!

ஊரது மெச்ச வாழ்ந்து
உதவிடும் உத்தமச்செம்மல்
பாரினில் மனித வாழ்வு
நிலையற்ற தென்ற உண்மை
தெரிந்தவர் கர்வம் கொள்ளார்
தெய்வத்தின் தொண்டு ஒன்றே
சரிவர எங்கள் குஞ்சி
ஆற்றினார் அமைக! சாந்தி!

**மகள் செல்லம்**

# அனுதாப மடல்

அன்பின் கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவு குறித்து நாம் பேரதிர்ச்சிக்குள்ளானோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். அவரது ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திக்கின்றோம்.

**திரு. குமாரவேலு (முன்னாள் அதிபர்)**
**காரைநகர்.**


---

# இரங்கல் செய்தி

அன்பின் கணபதிப்பிள்ளை அண்ணர் மனைவி பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் அண்ணர் கணபதிப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்ட நான் மிகவும் மனவருத்தம் அடைந்தேன். நல்ல பண்பும் எல்லாருடனும் அன்பாக பழகுவார், அதிலும் எங்கள் குடும்பத்தாருடன் மிகவும் நெருக்கமான தொடர்புகள் கொண்டு இருந்தார். ஐயா என்ன அறுவல் கொள்ளும் செய்த கொடுப்பார் அப்படியான மனிதரின் மரண செய்தி உங்கள் எல்லோரையும் அதிர்ச்சி அடைய வைத்து இருக்கும், அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அத்துடன் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
**அன்புடன் மு.சாந்தன் (சுவிஸ்)**

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 01 . 1939 | 06 . 03 . 2011 |

## அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அன்னாரின் பிரிவால்

துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த

அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்

ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மொனிக்கா கலர் லாப் நிறுவனத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 – 01 – 1939 | 06 – 03 – 2011 |

அனலைதீவு வடக்கு கிராம அபிவிருத்தி சங்க முன்னாள் தலைவரும்
அனலைதீவு பல.நோ.கூட்டுறவு சங்க தலைவரும்

## அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

காலையும் வெந்தது மாலையும் வெந்தது
ஆறாப்புண்ணில் மாறாக்காயமாய்
எரிந்தது தீயாய் உங்கள் பிரிவு
கண்ணியம் காக்கும் அருளப்பா
புண்ணியம் போற்ற பிறந்தவரே
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உங்கள் அன்பால்
நினைவிக்க முடியாது
நீந்துகிறோம் துயரத்தில்.........
மனிதன் மரணத்தை வென்றதுமில்லை
மரணம் மனிதனிடம் தோற்பதுமில்லை

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

நீங்காத துயரில்
அனலைதீவு வடக்கு கிராம அபிவிருத்தி சங்கம்
அனலைதீவு வாழ் மக்கள்

# அனுதாப அஞ்சலி

| மண்ணில் | | மனங்களில் |
|---|---|---|
| 28 - 01 - 1939 |  | 06 - 03 - 2011 |

நெடுந்தீவை பிறப்பிடமாக கொண்ட

## அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

*அன்பு மிகு தம்பியே!*
*அரிய உடன் பிறப்பே*
*பண்பாலே அனைவரையும்*
*பற்றி இழுத்து பல உறவாய் வந்தவரே*
*முன்னவனாய் நானிருக்க*
*என்னவரே எங்கு சென்றாய்?*
*உன் இழப்பால் நானும்*
*உன் சுற்றம் அத்தனையும்*
*மண்ணிற் புரண்டு கண்ணீர்*
*மழையாய்ச் சொரிந்து,*
*விண்ணவனை வேண்டுகின்றோம் - நீ*
*வீடு பேறடைய...*

அருமைத் தம்பியின் திடீர் இழப்பால் துயருறும் மைத்துனி பிள்ளைகள், பேரபிள்ளைகள், சுற்றத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

துயருடன்
அண்ணா (துரைச்சாமி), அண்ணி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# இதய அஞ்சலிகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1939 ✱ 01 ✱ 28 |  | 2011 ✱ 03 ✱ 07 |

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

( [illegible] அனலைதீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர், அபிவிருத்தி ஆலோசனைக் குழு உறுப்பினர்)

எமது மதிப்பிற்குரிய மக்கள் சேவகன், சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அவருக்கு எங்கள் இதய அஞ்சலிகள். தோழர் கணபதிப்பிள்ளை அவர்களின் அர்ப்பணிப்பு மிகுந்த மக்கள் சேவையும், எம்மோடு கரம் கோர்த்துப் பயணித்த மனவுறுதியும் என்றும் எம் ஞாபகங்களில் நிலைத்திருக்கும். அனலைதீவு மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தவராகவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், தோழர் கணபதிப்பிள்ளை ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவை.


எமது அழிந்த தேசத்தை மீளவும் கட்டியெழுப்பும் நோக்கில் திறம்படும் எங்கள் அரசியல் பணியில் ஓர் அங்கமாகத் திகழும் அபிவிருத்தி ஆலோசனைக் குழுவில் செயற்திறன் மிக்க உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

அர்ப்பணிப்பும், அயராத உழைப்பும் நிறைந்த தோழர் கணபதிப்பிள்ளையின் பிரிவு வேதனையான போதிலும், அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர எமது மக்கள் தயாராகுவதே அவருக்கான அஞ்சலியாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# கண்ணீர்க் காணிக்கை

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1939 - 01 - 28 | | 2011 - 03 - 07 |



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட
எமது குடும்ப நண்பர்
அமரர்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அன்பின் ஒளிவிளக்கே! பண்பின் சிகரமே!
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எம்முடன் பழகி
எல்லோருடனும் அன்புமழை பொழிந்து
எல்லா நாளும் எம்முடன் சிரித்துப் பழகிய நீர்
சொல்லாமல் பேசாமல் சென்றீரே!
உம் குடும்பத்தின் துடிப்போடு
நாமும் நொந்து துடிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்தும் கொள்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
க. கோபாலபிள்ளை குடும்பம்
யாழ். உணவகம்

சந்திரசேகரம்,
யாழ்ப்பாணம்.

---

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 28 - 01 - 1939 | | 06 - 03 - 2011 |



## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(தலைவர் அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

நெடுந்தீவில் அவதரித்த புதல்வரே அனலைதீவு வாழ் உத்தமரே
கூட்டுறவின் தன்னிகர் இல்லா தலைவரே
அனலைதீவில் கூட்டுறவுச் சங்கத்தை தனிச்சங்கமாக்கியவரே
பொதுபணி செய்வதில் வல்லவராக திகழ்ந்தவரே
அனலைதீவுக்கு வந்தவுடன் ஆச்சி ஆச்சி என்று
மனோன்மணி அம்மனை தரிசித்தவரே

ஆலயத்தொண்டுகளில் முன்னின்று நடத்தியவரே
கருக்காய் பணம் சேர்க்காது அயராது உழைத்தவரே
ஊரவர் போற்ற வாழ்ந்து காட்டியவரே
இன்று எம்மை எல்லாம் தவிக்க விட்டு சென்றது ஏனோ
வெள்ளிப்போல் கலங்கி நிற்கின்றோம் கண்ணீர் சொரிகின்றோம்.
எங்கள் அஞ்சலிகளை உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.
அன்னாரின் இழப்பினால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிக்கிறோம்

# நெடுந்தீவு மக்களின் இதய அஞ்சலி



மண்ணில் 28. 01. 1939

விண்ணில் 06.03.2011

## அமரர்
## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(தலைவர், அனலைதீவு ப.நோ.கூ. சங்கம், சிறந்த சமூக சேவையாளர் - தீவகம்)

ஏழு கடல் அலைமோதும் நெடுந்தீவு நெடுவெளியின்
மணிமயம் பதியில் உதித்து பணியிலும் எல்லோருக்கும்
உதவும் நல்இதயத்தாலும் ஏழு தீவுமக்களையும்
தன்பால் ஈர்ந்தவரே
அலைமோதும் கடலின் அரசியாம் "அலை அரசியில்"
அரசபணி தொடங்கியதால் "அலை அரசி" என எல்லா
மக்களாலும் அன்பாக அழைக்கப்பட்டவரே
கூட்டுறவுத் துறையினுள் நுழைந்து தீவக மக்களுக்கும் கூட்டுறவுத்
துறைக்கும் சிறப்புடன் பணியாற்றியவரே உங்கள் பிரிவால்
கலங்கி நிற்கின்றோம். எங்கள் இதய அஞ்சலியை
உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்
அவரின் இழப்பால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினரும் ஏனைய தீவக மக்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்து அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கரு விழிகளுடன்

—நெடுந்தீவு மக்கள் —

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(தலைவர், அனலைதீவு பல.நோ.கூ. சங்கம்)



மண்ணில் 28. 01. 1939

விண்ணில் 06.03.2011

கற்றோர் விரும்பும் கணபதி
பெற்றோர் பெருமையுறும் பிள்ளை
உற்றார் மகிழும் உறவாளன்
மண் பார்த்துப் போற்றும் மனிதன்
விண் பார்த்து வியக்கும் விவேகியாளன்

தந்தையாய்!
மந்திரியாய்!
தகை சான்ற சிநேகிதனாய்!
என்ன தவத்தால் இவ்வுறவைப் பெற்றோமென்று
கண் பார்த்து நாங்கள் களித்து மகிழ்ந்திருந்தோம்

ஏற்ற இடத்திற்கு எடுத்துக் காட்டான எளிமையும்
போற்ற மொழி போதா பக்குவம்
மாற்ற பொருளறியா மெய்மையும்
தூற்ற வெறுப்பின்றிய தோழமையும்
சிந்தை மகிழ வைக்கும் சிரிப்பும்
விந்தை குறையாத விடயமும்
அந்த நினைவோடு அழுகின்றோம் நாங்களெல்லாம்
எங்கள் துயர் தீர்க்க எழுந்தொருநாள் வாரீரோ

தங்கள் பிரிவால் துயருறும்
கா. இராசலிங்கம் குடும்பத்தினர்
க. கோபாலபிள்ளை குடும்பத்தினர்
நெடுந்தீவு

# ஆத்மாஞ்சலி



வையத்துள் அறிமுகம்
29.01.1936

தெய்வத்துள் சங்கமம்
06.03.2011

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

யாரை நோவதோ. விதிதனை நோவதோ, வினைதனை நோவதா, கலிதனை நோவதா, வாழ்வினை நோவதா, உலகினை நோவதா, கடவுளை நோவதா. யாரை நோவோம் பராபரமே. ஆனால் கடின உழைப்பால் உயர்ந்தவன், காலத்தால் மறக்க முடியாதவன் அமரர் உயர்திரு கணபதிப்பிள்ளை சின்னத்தம்பியைக் காலனவன் கவர்ந்ததை எண்ணும்போது

அமரன் அலை மக்கள் அனைவருக்கும் அருந்தொண்டாற்றிய பேரன்பன் ஆடம்பரமற்ற ஆணழகன் பல ஆண்டுகாலம் என்னுடன் பழகி அன்பு, பண்பு, பாசம், உறவு அனைத்தையும் பகிர்ந்த பண்பாளன்.

இலங்கையில் தீவுப்பகுதிகட்கு சேவையாற்றும் அலை அரசி மோட்டார் வள்ளத்தில் கணக்காளராகவும் அலையில் புதிதாகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு கட்டிடத்தை நிறுவித் தலைவராகக் செயலாற்றி அல்லும் பகலும் அயராது மக்களின் சேவை மகேசன் சேவை என்று தன்னை அர்ப்பணித்து மக்களின் மனங்களில் நிழலாடி மனித நேயம் நிறைந்த மறக்க முடியாத உத்தமன்.

இல்லாள்ஹனும் நல்லாள் சிவக்கொழுந்துவின் இன்பத் துணைவனாகி, தனது மகனை இழந்தும் மனந்தளராது மக்களின் சேவை வாழ்வில் ஒளி விசும் என்று நினைத்து வாழ்ந்த குணத்தின் குன்று.

உன் காலத்தை நீயே வெல்லும் கருப்பொருள் உன்னிடம் இருந்தது உழைத்தே உயர்வேன் என்னும் ஊக்கம் உன்னிடம் இருந்தது. உன் ஊரின் நலன் காண் பார்வை நிறைய உன்னிடம் இருந்தது. உன் மனைவி பிள்ளைகள் தேடி ஓடிவரும் அன்பு உன்னிடம் இருந்தது. உதவிக்கரம் நீட்ட உயிர்தரும் நண்பர்கள் கூட்டம் உறுதியான நெஞ்சம் உதவிசெய்யும் மனப்பாங்கு, எதையும் தாங்கும் இதயம் நிரம்பியவர். கோபம் என்றால் என்ன என்று விசாரிக்கும் அளவிற்கு மனிதநேயம் நிறைந்தவர். என்னுடனும் என் குடும்பத்தாருடனும் நெருக்கமாய்ப் பழகி எனது துணைவியாரும் மகனும் நோயினால் துடித்துத் துன்பப்பட்டவேளையில் முன்னின்று பல உதவிகள் செய்த நண்பனை என்னால் மறக்க முடியாது. இவருடைய இழப்பு என்னால் மறக்கமுடியாது. இவருடைய இழப்பு ஊர் மட்கட்குப் பாரிய இழப்பாகும். இவர்போன்ற உத்தம குணங்களை இனி எப்பிறப்பில் காண்போம்.

அன்பான உள்ளம். ஆதரவுள்ள மனம் இரக்கம், சிந்தனை, உற்றாரை உபசரித்தல், தீங்கு நினையாமை இத்தனை நற்குணங்களையும் நிரம்பப் பெற்றவனே, சாந்தி பெறுவாயாக.

அன்னாரை இழந்து துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த துயரத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்தி நானும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய ஐயனாரின் பாதார விந்தங்களைத் தொழுதெழுவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அலைலை
பொன் லிங்கலிங்கம்
647-889-6114

# நன்றி நவில்கின்றோம்

06.03.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த

எமது அன்புத் தெய்வம் அமரத்திரு

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து எம் ஆறாத்துயரில் பங்கெடுத்த அயலவர்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள் சமர்ப்பணம் ஆக்கியவர்களுக்கும் தொலைபேசி மூலமாகவும், தொலைநகல் மூலமாகவும் தந்திச் சேவை மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், பிரான்ஸ், கனடா, இந்தியா, கொழும்பு போன்ற இடங்களில் உள்ள அன்னாரது மகன், சகோதரர்கள், உறவினர்களின் இல்லங்களுக்கு சென்று துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் மரணச்செய்தி அறிந்ததும் உடன் வந்து எமக்கு பல வழிகளிலும் சரீர உதவிகளை வழங்கியவர்களுக்கும், வானொலி, பத்திரிகை மூலம் மரணச்செய்தி, கண்ணீர் அஞ்சலிகளை வழங்கியோருக்கும் விருந்தோம்பல்களை நல்கியோருக்கும் இறுதிக் கிரியைகள் நடைபெறும் போது இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும் இறுதிக்கிரியை, அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திக்கிரியை போன்ற கிரியைகளை நிகழ்ததிய குருமார்களுக்கும், இறைவன் புகழ் பாடியோருக்கும் "கணபதி நாதம்" எனும் இந்நினைவு மலராகட்கத்திற்கு உதவிய வர்களுக்கும், இம்மலருக்கு ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும் இம்மலரை திறம்பட அச்சிட்டோருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல 11, வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# வம்ச மரபு வழி

இருமரபும் தூய தனிநாயக முதலி
வழித்தோன்றல்கள்

குமாரசுவாமி உடையார் *
↓
இராமநாதர் *
↓
ஆறுமுகம் *
↓
சின்னத்தம்பி *

மண்டிப்பதி தம்பி உடையார்
ஐயம்பெருமாள் *
↓
* அம்பலவாணர் + பொன்னாச்சி *
↓
கணபதிப்பிள்ளை *
வேலுப்பிள்ளை *
சிவகாமிப்பிள்ளை *
சின்னத்தங்கம் *
சீதேவிப்பிள்ளை *

(சின்னத்தம்பி * — சின்னத்தங்கம் *)
↓
நவரத்தினம் + சுப்பிரமணியம் *
துரைச்சாமி + சின்னப்பிள்ளை
* சௌந்தரம்மா + வேலுப்பிள்ளை
* தையலம்மை + சண்முகம் *
* சிவகாமிப்பிள்ளை + குமாரசாமி *
* **கணபதிப்பிள்ளை**
சடேஸ்வரி + செல்வரெட்ணம் *

யாழ் கந்தர்மட
* மாப்பாண முதலியார்
↓
அருணாசலம் *
↓
சின்னப்பா உபாதியாயர் *
↓
* வேலுப்பிள்ளை + பத்தினி *
தங்கம்மா + சுப்பிரமணியம் *
நடராசா (அமரர்)
இரத்தினம் + கந்தசாமி *
சின்னராசா (அமரர்)
இராசையா + விஜயலஷ்மி
**சிவக்கொழுந்து**
நல்லம்மா (அமரர்)
சிவபாக்கியம் (அமரர்)
சிவசாமி + கௌசல்யா
யோகராசா + சிவநந்தினி

(கணபதிப்பிள்ளை — சிவக்கொழுந்து)
↓

சிறிமாறன் *
+
சங்கீதா
↓
சுஹாசினி
கலாஜினி
கௌசிகா

ஜெயசங்கர்

மோகனா
+
துசீந்தன்

* அமரர்களைக் குறிக்கும்



பகவத்கீதை
"நாற்புறமும் நிரம்பித் ததும்பும்
அசையாத பெருங் கடலில்
பெரிய மற்றும் சிறிய ஆறுகளெல்லாம் வந்து
பாய்ந்து அடங்கி விடுவதைப்போல,
எந்த மனிதனின் எல்லா ஆசைகளும்
அவனுள் வந்து அடங்கி விடுகின்றனவோ
அவனுக்கு சாந்தி கிட்டுகின்றது.
மாறாக ஆசைகளின் பின்னே
சென்றுழலும் மனிதனுக்கு
அமைதி இருப்பதில்லை"
"நடந்தவை, நடப்பவை, நடக்கவிருப்பவை,
எல்லாம் உலக நியதிப்படியும்
எனது படைப்பின் பிரகாரமுமே"
- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -
நல்லூர். 021 2229285